www.ekuruvi.com
குருவி

சிறகு - 01 | 12.09.2012 | பறப்பு -04

மனநலம் பேணிடத் தமிழ்க் கனடியர் நடை

Tamil Canadian Walk in Support of Mental Health

4 ஆவது ஆண்டு கனடியத் தமிழர்

நிதி சேர் நடை 5k


4th Annual Tamil Canadian

Walk - A - Thon

IN SUPPORT OF camh FOUNDATION

Sunday September 16 2012

Thomson Memorial Park Scarborough



கனடிய தமிழர் பேரவையின் மனநலம் பேணிடத் தமிழ்க் கனடியர் நடை

Sunday September 16, 2012
Thompson Memorial Park, Scarborough

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள போதைக்கு அடிமையாதல் மற்றும் மன நல பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் மனநல ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு முகாம் ஒன்றிற்கு கனடிய தமிழர் பேரவை ஏற்பாடு செய்துள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதியன்று ஸ்காபுறோவில் உள்ள தொம்சன் பார்க்கில் பிரமாண்ட நடைப்பவனி ஒன்றை நடத்தவும் , அதனைத் தொடர்ந்து அடிமை மற்றும் மன நலம் ஆலோசனை மையம் (CAMH) உதவியுடன் தமிழ் மக்களின் மனநலப் பிரச்சினைக்குரிய தீர்வுகள் குறித்த கலந்துரையாடலை நடத்தவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நம் மக்களில் பெரும்பான்மையானோர் சிறிலங்காவில் நடைபெற்ற போரினால் பாதிக்கப் பட்டதோடு மட்டுமன்றி வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்த பின்னரும் அந்நாட்டின் கலாச்சாரம் மற்றும் சூழ்நிலைகளுக்குத் தக்க தங்களை மாற்றிக் கொள்ள முடியாததால் மன நலப் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் தனித்து விடப்பட்ட பலர் சமுதாயத்தைக் கெடுக்கும் தீய பழக்க வழக்கங்களுக்கும் ஆளாகின்றனர் என்பதால் இந்த பிரச்சினைக்கான விழிப்புணர்வை சமூகத்திடம் ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்பதை ரொறொன்ரோவில் இயங்கி வரும் லூழரவாமைெ எனப்படும் சமூக நல ஆய்வு மையம் சமீபத்தில் ஸ்காபுறோவில் வாழும் தமிழர்களிடம் நடத்திய ஆராயச்சியின் மூலம் கண்டுபிடித்துள்ளது. இந்த ஆய்வு முடிவுகள் எதிர்வரும் கோடைக்காலத்தின் போது வெளியிடப் படவுள்ளன.

தமிழ்ச் சமூகத்தில் நிலவும் இது போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே கனடிய தமிழர் பேரவை ஆண்டுதோறும் நடத்தி வரும் நடைபவனியில் இந்த ஆண்டுக்கான தொண்டு நிறுவனமாக ஊயுஆஊ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஒன்றோரியோவின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பிராட் துகிட் நடைப்பவனியை துவக்கி வைக்க உள்ளார். ஸ்காபுறோ–அஜின்கோர்ட் பகுதி சட்டமன்ற உறுப்பினரான சூவாங் இந்நிகழ்வில் கலந்து கொள்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாடு சுபிட்சமடைய, சுகாதாரம் முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது. “நோய்கள் அல்லது சுகாதார கேடின்றி இருப்பது மட்டுமல்ல, சுகாதாரம் என்பது உடல், மனம், சமுதாயம் உள்ளிட்ட அனைத்து நலன்களையும் உள்ளடக்கியது. நாம் அனைவருமே நேரடியாகவோ, மறைமுகவாகவோ மனநலம் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை சந்தித்தே வருகிறோம். அடிப்படையில், மனநலம் என்பது தனிநபர் மற்றும் சமுதாயத்தின் வெற்றிகரமான செயல்பாடுகளுக்கு மிக முக்கியம். சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கனடியர்களில் ஐந்தில் ஒருவர் மனநலக் குறைபாடுகளுக்கு ஆளாகின்றனர் என்பதும் தெரிய வந்துள்ளது.



இது தொடர்பாக நடத்தப்படவுள்ள ஆலோசனை முகாமில் தமிழ் மக்கள் தங்கள் சொந்தக் கதைகளை பிறருடன் பகிர்ந்து கொள்ளலாம். இது தொடர்பிலான ஆலோசனைகளை அளிக்க CAMH மருத்துவ நிபுணர் குழுவினர் பலர் வரவிருப்பதால் மனநோய்கள் எதனால் ஏற்படுகின்றன , அதன் அறிகுறிகள் என்னென்ன உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும் விரிவாகத் தெரிந்து கொள் வதற்க்கான வாய்ப்பு ஏற்படும். குடி மற்றும் போதைப்பொருள் பயன்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் முதலில் அவற்றிலிருந்து வெளி வரவும் இந்த ஆலோசனை முகாம் பயனுள்ளதாக இருக்கும்

கனடாவில் மட்டுமன்றி உலகளாவிய அளவில் பல நாடுகளில் மனநலம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் , சிறிலங்காவில் போருக்குப் பின்னர் மன நலம் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சிறந்த சிகிச்சையளிப்பதிலும் CAMH அர்பணிப்பு உணர்வுடன் அரும்பணியாற்றி வருவதால் தமிழ் மக்கள் அனைவரும் இந்த நடைப்பவனியில் கலந்து கொண்டு நிதி சேர்க்க உதவுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த விழிப்புணர்வு நடைப்பவனியில் கலந்து கொள்ள விரும்புவோர் மேற்கொண்டும் விபரங்களை www.canadiantamilcongress.ca இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

பிசினஸ் கனெக்ஷன்ஸ் வழங்கும் சிறந்த இணையதளங்களுக்கான விருதுகள்

Biztha Web Awards 2012

கனடாவில் வாழும் தமிழ் தொழில் முனைவோர் மற்றும் சேவை இணையதளங்களின் தனித்தன்மை, புதிய விளம்பர தொழில் உத்திகளை அங்கீகரித்து உலகிற்கு உணர்த்தும் பொருட்டு "Biztha Web Awards" எனப்படும் சிறந்த இணையதளத்திற்கான விருதினை இந்த ஆண்டு முதல் அறிமுகப் படுத்த உள்ளார்கள். இந்த அரிய வாய்ப்பினை கனடாவில் உள்ள இணையதளங்கள் பயன்படுத்திக் கொண்டு தங்கள் தொழிலை மேலும் சிறப்பாக்குமாறு பிசினஸ் கனெக்ஷன்ஸ் நிறுவனத்தினர் அன்புடன் கேட்டுக் க்கொள்கின்றர்கள். மேலும் அவர்களது அறிக்கை வருமாறு

"சிறந்த இணையதளத்திற்கான தேடல்" – Biztha Web Awards 2012

கனடிய தமிழ் தொழில் முனைவோர் மற்றும் சேவை அளிப் போரின் சிறந்த இணையதளங்களை உலகிற்கு அறிமுகம் செய்யும் பொருட்டு இந்த ஆண்டு முதல் "Biztha Web Awards" எனப்படும் சிறந்த இணையதளத்திற்கான விருதினை Business Connections அறிமுகம் செய்கிறது.

இணையதளங்களின் மூலமாக உங்கள் தொழிலுக்கு பல புதிய வாய்ப்புக்களை உண்டாக்குவதுடன், கனடிய தொழில் இணைய தளங்களுக்கு சர்வதேச அங்கீகாரம் ஏற்படுத்திக் கொடுக்கவே இந்த இணையதளப் போட்டி நடத்தப்படுகிறது.

நோக்கம்:

1. தொழில் முனைவோரின் இணையதளத்திற்கு சர்வதேச அங்கீகாரம் உண்டாக்குவது , குறிப்பாக கனடியத் தமிழ் தொழில் முனைவோர் இணையதளங்களை கனடா மட்டுமன்றி உலக அரங்கிலும் மிளிர வைப்பது.
2. உங்கள் தொழில் குறித்த விழிப்புணர்வை இணையதளம் வாயிலாக மக்களுக்கு அறிமுகம் செய்வதுடன், தொழில் முனைவோருக்கும் சிறந்த அங்கீகாரம் பெற்றுத் தருவது.
3. உங்கள் தொழில் இணையதளத்தின் தரத்தினை மேம்படுத்த தளம் அமைத்துக் கொடுப்பது.

இந்த போட்டியில் கலந்து கொள்வதால் ஏற்படும் நன்மைகள்?

சிறந்த இணையதளமாக தேர்ந்தெடுக்கப்படுபவைகளுக்கு Biztha Web Award 2012 வழங்கும் விருதும் , சான்றிதழும் அளிக்கப்படும்.

இணைய விளம்பரங்கள் மூலமாக உங்கள் தொழிலின் தரத்தை மேம்படுத்தவும் , இணைய விளம்பர உத்திகளை அறிந்து கொள்ளவும் தளமேற்படுத்திக் கொடுக்கபப்டும்.

போட்டி முடிவடைந்து விருதுகள் வழங்கப்படும் விழா வரையிலும் உங்கள் இணையத்தளம் பிசினஸ் கனெக்ஷன்ஸ் இணையதளத்தில் சிறப்பாக இடம்பெறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்

உங்கள் இணையதளங்கள் அதற்கான இணைப்புடன் எம் www.biztha.com இணையதளத்தில் இடம் பெறும்.



விருது வகைகள்:

1) சிறந்த கூட்டமைப்பு நிறுவன இணையத்தளம்.
(Best Corporate Website)
2) சிறந்த தொழில் சேவை இணையத்தளம்.
(Best Business Service Website)
3) சிறந்த தன்னார்வத் தொண்டு இணையத்தளம்
(Best Non-Profit Website)
4) சிறந்த ஊடக அல்லது தகவல் இணையத்தளம்
(Best Media or Informatics Website)

தகுதிகள்:

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் தொடர்ந்து தொழிலில் இருந்திருக்க வேண்டும்.

தொழிலின் உரிமையாளர் தமிழராக இருக்க வேண்டும்.

தொழிலின் உரிமையாளர் சமூகத்தின் நன்மதிப்பை பெற்றவராய் இருத்தல் அவசியம்.

இணையதளத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள விளம்பர வியூகங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இணைய தளத்தின் அனைத்து பக்கங்களும் பூர்த்தியாகியிருக்க வேண்டும்.

தொடர்பு கொள்ளும் தகவல்கள் சரியானவையாக கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இணையத்தளம் துவங்க எடுத்துக் கொள்ளும் நேரமும் கணக்கிலெடுக்கப்படும்.

இணையத்தளத்தின் வடிவமைப்பு மற்றும் அதன் உள்ளடகத்திற்கும் முக்கியத்துவம் உண்டு.

விதிமுறைகள்

1. தகுதியான தொழில் இணையத்தளங்களை தேர்ந்தெடுக்கும் உரிமை Business Connections தெரிவுக் குழுவினருக்கு மட்டுமே உண்டு.
2. விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தங்கள் தொழில் இணையத்தளம் குறித்த அனைத்து ரகசியங்களும் நிச்சயமாக பாதுகாக்கப்படும்.
3. விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மை என்பதனை விண்ணப்பதாரரே உறுதிப்படுத்த வேண்டும்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலம் Business Connections அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்களின் info@biztha.com மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம்.
5. தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களில் "private & confidential" என குறிக்கப்பட்டிருக்க வேண்டும். தபால் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் Nov 1, 2012. மின்னஞ்சல் மூலம் பெறப்படும் விண்ணப்பங்களுக்கான கடைசி நாள் Nov 5, 2012.
6. Business Connections நிறுவன ஊழியர்கள், ஆலோசகர்கள் மற்றும் எம்மால் நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவினருக்கு விண்ணப்பிக்கும் தகுதி கிடையாது.
7. மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரி:

Business Connections அலுவலகம்:
Tel: 416 272 8543, Tel: 647 346 8543
இ-மெயில்: info@biztha.com

கனேடிய பிரதமருக்கு
நியூயார்க் நீதி அறக்கட்டளை புகழாரம்



"ஜனநாயகம், மனித உரிமைகளை நிலை நாட்டிய சிறந்த அரசியல் மேதகை ஹார்ப்பர்!!" - நியூயார்க் நீதி அறக்கட்டளை புகழாரம்.

உலக அரங்கில் மிக மதிப்பு மிகுந்த விருது ஒன்றினைப் பெற பிரதமர் ஹார்ப்பர் நியூயார்க் செல்லவிருப்பதால் பாராளுமன்றில் இந்த மாத கேள்வி நேரத்தில் பங்கேற்க மாட்டார் எனத் தெரிய வந்துள்ளது. இந்த வருடத்திற் கான ஜனநாயகம், மனித உரிமைகளை நிலை நாட்டிய சிறந்த அரசியல் மேதகை யாக ஹார்ப்பர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.


நியூயார்க்கை சேர்ந்த நீதி அறக் கட்டளை ஒன்று ஆண்டுதோறும் மனித உரிமைகளை நிலை நாட்டிய சிறந்த அரசியல் மேதகைகளுக்கான விருதை வழங்கி அவர்களை உலக அரங்கில் கௌரவப்படுத்தி வருகிறது. 1965 முதல் இந்த விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டிற்கான மனித உரிமைகளை நிலை நாட்டிய சிறந்த அரசியல் மேதகையாக ஹார்ப்பர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செப்ரெம்பர் 27 ஆம் திகதி நியூயார்க்கின் வால்டோர்ப்-அஸ்டோரியா தங்கும் விடுதியில் நடைபெற உள்ள விழாவில் இந்த விருது பிரதமருக்கு வழங்கப்பட உள்ளது. கடந்த வருட விருது தென் கொரிய அதிபர் லீ மியூங் பாக்கிற்கு வழங்கப்பட்டது. முன்னாள் பிரதமர் துநயெ ஊாசநவைநெ, முன்னாள் பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஷி , முன்னாள் பிரித்தானிய பிரதமர் கோர்டன் பிரவுன் ஆகியோரும் விருதினைப் பெற்றவர்களில் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

ஹார்ப்பரை ஜனநாயகம், மனித உரிமைகளை நிலை நாட்டிய சிறந்த அரசியல் மேதகையாக நீங்கள் நினைக்கிறீர்களா ??

இது தொடர்பான தங்கள் கருத்துக்களை வாசகர்கள் இகுருவி மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

ஆசிரியர்களுக்கெதிரான சட்ட முன் வரைவு
கோன்செர்வேற்றிவ் கட்சி உதவியுடன் நிறைவேற்றம்
பதவியில் நீடிப்பாரா மக்கென்றி?




ஒன்ரோறியோ ஆசிரியர்களை கொதிப்படையச் செய்த இரண்டு வருட ஊதிய உயர்வு இடைநிறுத்தம் , விடுப்பு நாட்களுக்கான சலுகைகளில் மாற்றம் ஆகியவற்றுடன் கூடிய புதிய சட்ட முன் வரைவு ப்ரோக்ரேச்சிவ் கோன்செர்வேற்றிவ் கட்சி உதவியுடன் நேற்று நிறைவேற்றப்பட்டது. இதனால் கொதிப்படைந்துள்ள ஆசிரியர்கள் அரசின் போக்கிற்கு எதிராக தங்கள் ஆர்ப்பாட்டங்களை துவக்க முடிவு செய்துள்ளனர்.

ஆசிரியர்களால் வேலை நிறுத்தம் செய்ய முடியாத அளவிற்கு அதற்கும் சட்ட திருத்தத்தில் கடிவாளம் போடப்பட்டுள்ளதால் முன்பு முதல்வர் மக்கென்றியை தங்கத் தட்டில் வைத்துத் தாங்கிய ஆசிரியர் சமுதாயம் எப்படியும் மக்கென்றியை பதவியிலிருந்து விரைவில் இறக்குவது அல்லது இனி வரும் தேர்தல்களில் லிபரல் கட்சிக்கு வாக்களிப்பதில்லை என்ற நிலைக்கு வந்தது விட்டனர். சமீபத்தில் நடந்து முடிந்த கிட்செநேர் வாட்டர்லூ இடைத்தேர்தலில் இதற்கான பாடத்தையும் புகட்டத் தொடங்கி விட்டனர்.

தொடர்ந்தும் சிறுபான்மை அரசாக நீடித்து வரும் லிபரல் கட்சி இனி வரும் தேர்தல்களில் மக்கென்றியை முதல்வர் வேட்பாளராக அறிவித்தால் வாக்குகளைப் பெற முடியாத சூழல் ஏற்பட்டிருப்பது அக்கட்சிக்குள்ளும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது. இம்மாத இறுதியில் நடைபெற உள்ள லிபரல் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்திற்குப் பின்னரே கட்சியின் தலைமையில் மாற்றம் செய்யப்படுமா என்ற விபரங்கள் வெளியாகும்.

முறைகேடான வழிகளில் கனடிய குடியுரிமை பெற்றவர்கள் மீது நடவடிக்கை

- ஜேசன் கென்னி விளக்கம் -




கனடாவில் குடியுரிமை பெற பலர் மோசடியான வழிகளில் செயல்பட்டு வருவதாகவும் , அவ்வாறான் குடியுரிமையை பெற்றவர்கள் மீதும் முறைகேடான வழிகளில் நாட்டிற்குள் வர விண்ணப்பித்தோர் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியுள்ளார்.

அண்ணளவாக் 100 நாடுகளிலிருந்து குடிவர விற்காக விண்ணப்பித்துள்ள 11,000 பேர் முறைகேடான வழிகளை பயன்படுத்தியுள்ளதாக கண்டறியப்பட்டதையும், நாட்டினுள் இருக்கும் சிலரும் தங்கள் குடியுரிமை தகுதி நிலையை நீட்டித்துக் கொள்வதற்காக இது போன்ற விண்ணப்பங்களை அளித்துள்ளதாகவும் கென்னி விளக்கப்படுத்தியுள்ளார்.

கனடாவின் நிரந்தர குடியுரிமையைப் பெறுவதற் கான விதிமுறைகள் எதையும் பின்பற்றாமல் மோசடியான் வழிகளில் நாட்டிற்குள் நுழைந்துள்ளோர் மீது தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக இதுவரையிலும் முறைகேடான வழிகளில் நுழைந்த 3,100 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் வளைகுடா நாடுகளிலிருந்து கனடா வந்து குடியேறியவர்கள். போலியான வழிகளில் பெற்ற இந்த குடியுரிமைகளை அரசு ரத்து செய்ய திட்டமிட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

அதே போன்று கனடாவில் நிரந்தர குடியுரிமையைப் பெற்ற 5,000 பேர் கனடாவில் ஒரு போதும் வசிக்கவே இல்லை என்றும் தெரிய வந்துள்ளதால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கபப்ட உள்ளது. மேலும் இது போன்ற மோசடிக்காரர்களாக கருதப்படும் 2500 பேரை பல விடயங்கள் தொடர்பில் அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறதென்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

ஒன்ரோறியோ சுகாதாரத் துறையில் மாற்றங்களை கொண்டு வர றிம் ஹூடக் அரசுக்கு ஆலோசனை




ஒன்ரோறியோ சுகாதாரத் துறையில் புதிய புரட்சிகளைப் புகுத்தி மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் நிதியினை வழங்கவும் , நோயாளிகளின் உடல் நிலையை சிறந்த முறையில் பேணவும் பல ஆலோசனைகளை வாரி வழங்கியுள்ளார் ப்ரோக்ரேச்சிவ் கோன்செர்வேற்றிவ் தலைவர் றிம் /ஹடக். இவரது ஆலோசனைகளின் படி பார்த்தால் , மருத்துவத் துறையில் செயலாற்றி வரும் 2,000 முக்கியப் புள்ளிகள் தங்கள் பணியை இழக்க நேரிடும்.

ஒன்ரோறியோவில் செயல்பட்டு வரும் சுகாதார ஒருங்கிணைப்பு வலையங்களையும் , சமுதாய நல பராமரிப்பு மையங்களையும் மூடி விட்டால் கூ800 மில்லியன் மிச்சமாகும் என்றும் அதனை நோயாளிகளுக்கு சிறந்த சிகிச்சை அளிப்பதில் அரசு பயன்படுத்தலாம் என்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக 15 பக்கங்கள் அடங்கிய தான் ஆலோசனைகளை நேற்று வெளியிட்ட றிம் /ஹடக், இந்த ஆலோசனைகள் சுகாதாரத் துறையினரிடையே சர்ச்சையை ஏற்படுத்தும் என்ற போதிலும் கூட நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டு இவற்றை. நடைமுறைக்கு கொண்டு வந்தால் மட்டுமே தற்போது சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க வழி ஏற்படும் என்றும் விளக்கப்படுத்தியுள்ளார்.

மில்ட்டனில் ஆறு வயதுக் குழந்தையைக் கொன்று தன்னுயிரையும் மாய்த்துக் கொண்ட தந்தையால் பரபரப்பு



மில்ட்டன் வீடொன்றில் வசித்து வந்த Wojciech Kosalka என்பவர் தான் ஆறு வயது மகனைக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அனைவரையும் அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. சனிக்கிழமை நடைபெற்ற இந்த கோர சம்பவத்திற்குப் பின்னர் இரு உடல்களையும் கைப்பற்றிய காவல்துறை அதிகாரிகள் ஆறு வயதுச் சிறுவன் கொலை செய்யப்பட்டுள்ளதையும் , சிறுவனைக் கொலை செய்த பின்னர் தந்தை தன் உயிரை தானே மாயந்திருக்க வேண்டும் என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளனர்.

ஆனால் இந்த சம்பவம் தொடர்பாக அக்கம் பக்கத்தில் உள்ளோரை அதிகாரிகள் விசாரித்ததில் Wojciech Kosalka மிகச் சிறந்த தந்தை என்பதும், தான் ஆறு வயது மகன் Noah மீது அவர் உயிரையே வைத்திருந்ததாகக் கூறுகின்றனர் குடியிருப்புவாசிகள். அவர் தன மகனை கொலை செய்திருக்க வாய்ப்பே இல்லை எனவும் வாதிடுகின்றனர்.

தன் மகன் தேவதையைப் போன்றவன் எனக் கூறி குழந்தையை பறிகொடுத்த சோகத்தில் துடிக்கிறார் தாய். மேயா படித்து வரும் பாடசாலையிலும் நண்பர்களும் , ஆசிரியர்களும் அவனை வெகுவாகப் புகழ்கின்றனர். இந்த கொலை சம்பவத்தில் துப்பெதுவும் கிடைக்காததால் மேற்கொண்டும் விசாரிக்க முடியாத நிலை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

போட்டிகளை தடுக்கும் விதத்தில் ரொறொன்ரோ வீட்டு வசதிக் கழகம் செயல்படுவதாக குற்றச்சாட்டு



கடந்த வருடம் ரொறொன்ரோவின் வீடு விற்பனை முகவர் தொகை பரிமாற்றங்களில் பாதிக்கும் மேற்பட்ட மிகப் பெரிய தொகை வீடுகள் விற்பனையில் இறங்கியுள்ள ReMax மற்றும் Royal LePage நிறுவனகளின் முகவர்களுக்கே போய்ச் சேர்ந்துள்ளது தெரிய வந்துள்ளது. சென்ற வருட மொத்த தரவுத் தொகையான $40 பில்லியனில் பெரும்பான்மையானவை மிகப்பெரிய வீடு விற்பனை முதலைகளின் கையில் சென்று சேர்ந்துள்ளதால் போட்டி களை தடுக்கும் விதத்தில் ரொறொன்ரோ வீட்டு வசதிக் கழகம் செயல்படுவதாக பலர் குற்றஞ்சாட்டத் தொடங்கியுள்ளனர்.

முக்கியமான சொத்து விற்பனைகளில் 70 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட தொகையினை ஐந்து முக்கிய விற்பனை தரகு நிறுவனங்களே பெற்று வ்ந்துள்ளன என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதால் இது குறித்து விசாரிக்க தீர்ப்பாயம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கனடாவின் மிகப்பெரிய குழுமங்களில் ஒன்றான ரொறொன்ரோ வீட்டு வசதி வாரியத்தில் 35,000 உரிமமளிக்கப்பட்ட முகவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது இத்துறையில் பணியாற்றும் பலரிடையே அச்சத்தினையும் உண்டாக்கியுள்ளது. இணையம் மூலமாக முகவர் பணியாற்றும் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு வீடு விற்பனை குறித்த சரியான தகவல் களை அளிக்கக் கூடாது என்ற பாணியிலும் போட்டிகளை உண்டாக்காமல் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் பயனடையும் விதத்திலும் இந்த வாரியம் நடந்து வருவதாகவும் தீர்ப்பாயத்தின் முன்னர் சிலர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

காணொளிகளே செய்தி : அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்களின் நூல் வெளியீட்டு விழா

மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்களின் நூல் வெளியீட்டு விழா Warden & Highway, 101 Town Centre Boulevard, Markham, ON என்ற முகவரியில் 09.09.2012 மாலை 5:30 PM மணியளவில் நடைபெற்றது. தாய்வீடு பத்திரிக்கையில் வெளி வந்த கட்டுரைத் தொகுப்புக்கள் "மரம் மாந்தர் மிருகம்" என்ற பெயரிலும், ஈழ நாடு பத்திரிகையில் வெளி வந்த பாடசாலை அதிபர்கள் 23 பேர் பற்றிய தொடர்கள்" எம்மை வாழ வைத்தவர்கள்" என்ற பெயரில் இரு நூல்களாக வெளியிடப்பட்டது.



ஸ்காபுறோவில் பாரவண்டியும் காரும் மோதி 5 மாத பச்சிளம் குழந்தை பலி



கடந்த வாரம் செவ்வாய்க் கிழமையன்று ஸ்காபுறோவின் நெடுஞ் சாலை. 401 இல் இயந்திரக் கலப்பை பார வண்டி ஒன்று காருடன் மோதி விபத்துக்குள் ளானது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த 5 மாதக் குழந்தையும் , பருவ வயதுப் பெண்ணும் மோசமாகப் பாதிக்கப்பட்டதால் உடனடியாக சிக் கிட்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஆபத்தான காயங்களுடன் உயிருக் குப் போராடிய குழந்தைகளுக்கு மருத்துவர்கள் சிறந்த சிகிச்சையளித்த போதும் சிகிச்சை பலனின்றி நேற்று காலை குழந்தை மரணமடைந்தது. படுகாயமடைந்த பருவ வயதுப் பெண் மருத்துவமனையில் இன்னமும் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்தில் காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட ஓட்டுனர் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளார்.

காரின் ஓட்டுனர் கட்டுப்பாட்டை இழந்ததே விபத்துக்குக் காரணம் எனவும் தெரிய வந்துள்ளது. திடிரென கட்டுப்பாட்டை இழந்த கார் திண்காரை அரண் ஒன்றில் மோதி நின்றுள்ளது. காருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த பாரவண்டியின் ஓட்டுனரால் திடிரென வேகத்தைக் குறைக்க முடியாமல் போனதாலேயே விபத்து நேரிட்டுள்ளதாக காவல்துறை அறிக்கைகள் கூறுகின்றன. காரில் பயணம் செய்தவர்களின் உறவு முறை குறித்து எந்த தகவலும் இதுவரையிலும் வெளியாகவில்லை.

ரொறொன்ரோ மாநகரப் பகுதிகளில் வாகனக் காப்பீட்டிற்கு மிகையான தொகையை காப்பீட்டு நிறுவனங்கள் வசூலிக்கக் காரணங்கள் என்ன?

நாட்டின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும் போது ரொறொன்ரோ மாநகரில் மட்டும் வாகனக் காப்பீட்டிற்கு அதிகப்படியான தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் ரொறொன்ரோ நகரவாசிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். உண்மை நிலையை அறிந்து கொள்ள ரொறொன்ரோவில் வாகனக் காப்பீட்டில் இறங்கியுள்ள சில நிறுவனங்களை இகுருவி செய்தி களுக்காக சந்தித்தோம்.



ஆம், ரொறொன்ரோவில் வாகனக் காப்பீடு விலையுயர்ந்ததே என பகிரங்கமாக ஒப்புக் கொள்கின்றன இந்த நிறுவனங்கள். வாகனக் காப்பீடு தொடர்பான கோரிக்கைகளில் பல வித முறைகேடுகள் ரொறொன்ரோ நகர்ப்புறப் பகுதிகளில் நடந்து வருவதே இந்த விலையுயர்விற்கு காரணம் எனக் கூறுகின்றன இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள். ஆண்டுதோறும் திட்டமிட்ட வாகன மோசடிகளால் மட்டும் $770 மில்லியன் முதல் $1.6 பில்லியன் அளவிற்கான இழப்பை இத்துறை சந்தித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஒன்ரோறியோ பகுதிகளில் நிலவி வரும் இது போன்ற மோசடிகளால் நேர்மையாக வாகனக் காப்பீட்டுத் தொகை செலுத்தி வரும் மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என ஒப்புக் கொள்கிறார் கனடிய காப்பீட்டு செயலகத்தின் விசாரணைப் பிரிவு துணைத் தலைவர் றிக் டுபின். வாகனக் காப்பீட்டில் பாரிய முறைகேடுகளில் இறங்கியதாக 46 பேரை சமீபத்தில் யார்க் நகர காவல்துறை அறிவித்துள்ளது இதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

வாகனங்களை வேண்டுமென்றே விபத்துக்குள்ளாக்கி விட்டு பின்னர் காப்பீட்டு நிறுவனங் களிடமிருந்து இழப்பீடு பெறும் முறைகேடுகள் பெருமளவில் நடைபெற்று வருவதையும், விபத்துக் குள்ளானதை மெய்ப்பிக்க பல மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் கையொப்பத்துடன் கூடிய ஆவணங்களையும் இந்த கும்பல்கள் கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதற்காக அடையாளத் திருட்டு வேலைகளிலும் இறங்குகின்றன மோசடி கும்பல்கள்.

அது மட்டுமன்றி அதி நவீன உத்திகளை பயன்படுத்தி மோசடி வேலைகளில் இறங்கு வதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றன இந்த கும்பல்கள். இதற்காக கண்டுபிடிக்க முடியாத அளவில் அடிக்கடி தங்கள் தந்திர முறைகளையும், சூழ்ச்சிகளையும் மோசடியாளர்கள் மாற்றி வருவதையும் விவரித்துள்ளார் றிக் டுபின். இது போன்ற முறைகேடுகள் குறையும் வரை ரொறொன்ரோ நகர்ப்புற பகுதிகளில் வாகன காப்பீட்டுத் தொகை உச்சத்திலேயே இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

அன்பு இல்லக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்காக





ஈழநாடு நடாத்தும்

தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர்
உன்னிகிருஷ்ணனின்

இன்னிசை விருந்தும் இராப்போசன விருந்தும்



www.biztha.com
இந்த காணொளியை இணையத்தில் பார்க்கலாம்

அன்பளிப்பு: $100

இடம்: **The Princess Banquet Hall**
(3330 Pharmacy Avenue, Scarborough - Pharmacy & McNicoll)

மேலதிக விபரங்களுக்கு:

சரா மாஸ்டர்: 416.287.9223
ஈழநாடு பரமேஸ்: 416.841.9600

செப்டம்பர் 23, 2012
மாலை 5.00மணி

PLATINUM SPONSORS:

Ajith Sabaratnam (Sun Life Financial) 647-401-5800	Nathan Sritharan Law Office 416-499-2760	Cash Point (Pawn Brokers) 416-284-7000	Rubin Ariaratnam (Alpha Legal Team Inc.) 416-312-0978

GOLD SPONSORS:

Millennium Leisure Travel Inc. 416-431-9100	Jyothi (Food Products) 416-477-5345	Siva Nagamany (Sales Rep.) (Homelife Future Realty Inc.) 647-289-0091	Sri (Credit Solution Centre) 416-439-0224

SILVER SPONSORS:

Guna Thuraisingham (Auto & Home Insurance) 416-528-1407	R. R. Rajkumar (J.R.B. Universal Inc.) 647-289-6164	Jegan Kanagiah (YOYO Travel) 416-833-4012	The Princess Banquet Hall 416-261-3333
Jay (United Collision Centre) 416-414-8177	Tekon Banquet Services & Catering 416-844-3018	Thushi Thurairajah (Sales Rep.) (ReMax Vision Realty Inc.) 416-735-5292	Suresh Sellathurai (Sales Rep.) (ReMax Vision Realty Inc.) 416-844-5626
Athesivan Narayanasamy (Sales Rep.) (Homelife Future Realty Inc.) 416-568-1924	Dr. Ananthamoorthy (Risha Paralegal Services) 416-823-3686	Rangan (New Ranganas Jewel House) 647-702-2159	Venthiny Kathirgamanathan (Royal Brokers Corporation) 416-459-2728
Roshan Wignarajah (Mortgage Alliance) 416-716-5946	Canada Sabarimalai Ayyappan Temple 416-335-7700	Jude Gnanendran (Mortgage Alliance) 416-548-7933	Nada G. Nadarajah (Sales Rep.) (Homelife Landmark Realty Inc.) 416-616-8751
	Smart Telecom 416-509-5050	Tech Source 416-757-9111	

சுரங்கத் தொடரூந்து சேவையை பயன்படுத்துபவரா நீங்கள் - இதோ உங்களுக்காக ஒரு விளையாட்டு!!!



ரொறொன்ரோ போக்குவரத்துக் கழக சுரங்கத் தொடரூந்து சேவையை பயன்படுத்தும் மக்களிடம் இது தொடர்பில் அவர்களுக்கு உள்ள விழிப்புணர்வையும், அறிவையும் சோதிக்கும் வகையில் புதிய வினாடி – வினா விளையாட்டை அறிமுகம் செய்துள்ளது Spacing Magazine எனப் படும் ஊடக நிறுவனம். சவால் விடும் வகையிலான பல கேள்விகள் இந்த விளை யாட்டில் இடம் பெற்றுள்ளன.

இதில் கொடுக்கப்பட்டிருக்கும் ஒளிப்படங்களைக் கொண்டு எந்த தொட ரூந்து நிலையம் என கண்டறிய வேண்டும். நாம் நினைப்பது போல் மிக எளிதாக இல்லை விளையாட்டு. இகுருவி வாசகர்கள் தங்கள் போக்குவரத்து அறிவினை சோதிக்க http://subwayquiz.com/ என்ற இணையதளத்திற்குச் செல்லலாம்.

கனடிய சாலைகளையும், நீர் ஆதாரங்களையும் உடனடியாக பாதுகாக்காவிட்டால் விபரீதம்

- ஆய்வறிக்கையில் தகவல் -



கனடாவின் நகர்ப்புற கட்டமைப்புப் பணிகளான சாலைகளையும் , நீர் ஆதாரங்களையும் மேம்படுத்த பல பில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாகவும், இவற்றை சீர் செய்வதில் அரசு அக்கறை காட்டாவிட்டால் பெரும் விபரீதங்களை சந்திக்க நேரிடும் என சமீபத்தில் வெளியான ஆய் வறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நிதித் தட்டுப்பாடுள்ள நகராட்சிகளுக்கு கோன்செர்வேற்றிவ் அரசு வழங்குவதாக அறிவிக் கப்பட்ட கட்டமைப்பு நிதித் திட்டம் 2014 ஆம் ஆண்டுடன் காலாவதியாகிறது. ஆனால் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேம்பாட்டுப் பணிகள் எதுவும் இதுவரை நடைபெறாமல் பல நகராட்சிகள் மோசமான, ஆபத்தான சாலைகளையே கொண்டுள்ளன என்ற தகவல்களும் ஆய்வறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

123 நகராட்சிகளை முழுமையாக ஆய்வு செய்த பின்னரே இந்த ஆய்வறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. மொன்றியலின் ஏடைடந–ஆயசறை விரைவுச் சாலை , கார்டினர் விரைவுச் சாலை ஆகியவற்றில் திண் காரைக் கற்கள் உடைந்து அடிக்கடி போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் சம்பவங்களும் இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காணொளிகளே செய்தி : பனைக் கருப்பட்டி செய்வது எப்படி?

யாழ்ப்பாணத்தின் முக்கியத் தொழில்களில் ஒன்று பனை மரத்திலிருந்து கருப்பட்டி செய்வது. பனைமரத்திலிருந்து கருப்பட்டி உற்பத்தி செய்பவருடன் ஒரு நேர்காணல்



அகதி மக்களுக்கான சட்ட ஆலோசனை உதவிகளை அளிக்க ஒன்ரோறியோ சட்டத்தரணிகள் மறுப்பு



மருத்துவர்களிடம் ஒன்ரோறியோ அரசு நடந்து கொண்டதைப் போன்றே செலவீனக் குறைப்பு என்ற பெயரில் அகதி மக்களுக்கான் சட்ட உதவிகளைச் செய்யும் சட்டத்தரணிகளுக்கு வழகப்பட்டு வந்த கட்டணத்தை இடைநிறுத்தம் செய்துள்ளது. கடந்த வியாழக்கிழமை முதல் இதற் கான புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட் டுள்ளன.

முந்தைய விதிமுறைகளின் படி ஒன்ரோறியோ சட்ட உதவி (Legal Aid Ontario (LAO) என்ற பெயரில் அகதி மக்களின் கோரிக்கை மனுக்களை தயாரித்து நீதிமன்றில் அளிப்பது , அகதி மக்களுக்கு சட்டப்படி தேவைப்படும் கடிதங்களை எழுதிக் கொடுப்பது உள்ளிட்ட பல பணிகளுக்கு ஒன்ரோறியோ சட்டத்தரணிகள் அரசிடமிருந்து கட்டணம் பெற்று வந்தனர். அகதி மக்களின் கோரிக்கை மனுக்கள் நிராகரிக்கபப்ட்ட போதும் கூட இந்த கட்டணங்கள் முறைப்படி சட்டத்தரணிகளுக்கு வழங்கப் பட்டே வந்தது. ஒரு மணி நேரத்திற்கு $110 வீதம் நான்கு மணி நேரங்களுக்கான கட்டணத்தைப் பெற்றுக் கொள்ள அனுமதியும் இருந்தது.

தற்போதைய புதிய விதிமுறைகளின் படி இதற்கான உதவிக் கட்டணங்கள் எதையும் அரசு முதலில் வழங்காது. சட்டத்தரணிகள் தாங்களாகவோ அல்லது அகதி மக்களிடமிருந்து இதற்கான தொகையைப் பெற்றுத்தான் மனுக்கள் தொடர்பான அனைத்து கட்டணங்களையும் செலுத்த வேண்டும். அதன் பின்னர் இந்த செலவினை ஈடு செய்யுமாறு அரசிடம் கோரிக்கை விடுக்க வேண்டும். இதற்கான செலவீட்டுத் தொகையை வழங்குவதா, வேண்டாமா என்பதை அரசே பின்னர் தீர்மானிக்கும் என புதிய விதிமுறைகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த முறை ஏற்கனவே பல பிரச்சினைகளை சந்தித்து வரும் அகதி மக்களுக்கு அவர்கள் கையிலிருந்தே மேலும் செலவழிக்க வேண்டிய மோசமான நிலையையே ஏற்படுத்தும் எனக் கூறி அரசின் முடிவுகளை கடுமையாகச் சாடியுள்ளார் அகதிகளுக்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் ரொறொன்ரோ பகுதி பிரதிநிதிகளில் ஒருவராகிய ரௌல் பௌலகியா.

அரசின் இந்தப் போக்கு புற்றுநோயால் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நோயாளியை குணப்படுத்தும் மருத்துவரிடம், முதலில் இந்த நோயாளியின் பரிசோதனைகளுக்கான கட்டணத்தை நீங்களே செலுத்துங்கள். பின்னர் அதற்கான செலவு ஈடுசெய்வதா வேண்டாமா என்பதை நாங்கள் முடிவு செய்வோம் என கூறுவது போல் உள்ளது எனவும் கடுமையாக விமர்சித் துள்ளார் ரௌல் பௌலகியா.

இதனால் ஒன்ரோறியோவில் தற்போது அகதிகளுக்கான சட்ட உதவிகளை அளிக்க சட்டத்தரணிகள் முன்வருவது வெகுவாகக் குறைந்து விட்டது.

கனடிய தமிழ் மக்கள் பேராதரவுடன் Vaughan தொகுதியில் லிபரல் கட்சி வெற்றி கிட்செநேர் வாட்டர்லூவில் வாய்ப்பை இழந்து சிறுபான்மை அரசாகவே நீடிக்கும் அவல நிலை



நடந்து முடிந்த ஒன்ரோறியோ இடைத்தேர்தல்களில் இரண்டிலும் லிபரல் கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மையை பிடிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் Vaughan தொகுதியில் மட்டுமே அக்கட்சியால் வெற்றி பெற முடிந்துள்ளது. கிட்செநேர் வாட்டர்லூவில் புதிய ஜனநாயகக் கட்சியிடம் வெற்றி வாய்ப்பை பறி கொடுத்து மீண்டும் சிறுபான்மை அரசாகவே நீடிக்க வேண்டிய அவல நிலைக்கு லிபரல் கட்சியினர் தள்ளப்பட்டுள்ளனர்.

கனடிய தமிழ் மக்கள் பேராதரவுடன் களமிறங்கிய Vaughan லிபரல் வேட்பாளர் ஸ்டீவென் றேல் றுக்கா வெற்றியடைந்துள்ளார். கிட்செநேர் வாட்டர்லூ தொகுதியில் வாக்குகள் எண்ணப்பட்ட போது ஆரம்பத்திலிருந்தே என்.டி.பி வேட்பாளர் காதரின் பிபேவிற்கும் , கோன்செர்வேற்றிவ் வேட்பாளர் ட்ரேசி வேயலேருக்கும் கடுமையான போட்டி நிலவி வந்தது. ப்ரோக்ரேச்சிவ் கோன்செர்வேற்றிவ் வேட்பாளர் ட்ரேசி வேயலேரே வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திடிரென அவரை பின்னுக்குத் தள்ளிவிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்றார் என்.டி.பி வேட்பாளர் காதரின் பிபே.

இடைத்தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் ஒன்ரோறியோ சட்டசபையில் தற்போது லிபரல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்துள்ளது. பெரும்பான்மை அரசாவதற்கு குறைந்த பட்சம் 54 தொகுதிகளையாவது பெற்றிருக்க வேண்டும் என்பதால் மீண்டும் முக்கிய முடிவினை எடுப்பதில் பிற கட்சிகளை அண்டிப் பிழைத்தே மக்கென்றி வண்டி ஓட்ட வேண்டும்.

பாடசாலைகளுக்குத் திரும்பியுள்ள குழந்தைகளின் பெற்றோரா நீங்கள் ??
அப்படியெனில் முதலில் இதைப் படியுங்க !!!



கோடை விடுமுறையை குடும்பத்துடன் இனிது கழித்து வந்த நம் குழந்தைகள் மீண்டும் பாடசாலைகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். பொதுவாக ஒவ்வொரு வருடமும் பாடசாலைகள் மீண்டும் தொடங்கும் இந்த காலகட்டமே நோய் நுண்மங்கள் பெருகுவதற்கும் உகந்த நேரமாக உள்ளது. புதிதாக மீண்டும் பள்ளி திரும்பியவுடன் நம் குழந்தைகள் சந்திக்கும் புதிய சூழ்நிலை, புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள் போன்ற பல விடயங்களினால் அந்நிய நாட்டு பாக்டீரியாக்களும் அவர்கள் மீது தொற்றிக் கொள்வதை நம்மால் உணர முடிகிறது. பாடசாலையிலிருந்து திரும்பும் போதே சோர்வுடனும் , உடல் நலக் குறைபாட்டுடனும் தான் பல குழந்தைகள் வீட்டுக்கு வந்து சேர்கின்றனர்.

இனி நம் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்பும் போது வீட்டிலிருந்தே சில சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கினால் நுண்கிருமிகளை எதிர்த்துப் போராடும் ஆற்றலை நம் குழந்தைகளுக்குத் தர முடியும். கழிவறைக்குச் சென்ற பின்னர் கைகளை கழுவி சுத்தமாக்குமாறும் , இருமும் போதும் , தும்மும் போதும் சட்டையில் இணைக்கப்பட்டுள்ள கைக்குட்டைகளை பயன்படுத்துமாறும் 88 விழுக்காடு கனடியத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு போதிக்கின்றனர் என்பது உலக சுகாதார மன்றம் 2012 இல் நடத்திய ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில் 53 விழுக்காட்டினரே சாப்பிடுவதற்கு முன் கைகளை கழுவ வேண்டும் என்ற பழக்கத்தை உண்டாக்கியுள்ளனர்.

பாடசாலைகளில் நோய் நுண்மங்கள்அதிகமாகப் பரவும் இடங்கள் எவை , அவற்றிலிருந்து நம் குழந்தைகளை பாதுகாப்பது எப்படி என்பதை இகுருவி வாசகர்களுக்காக இங்கே கொடுத்திருக்கின்றோம்.

நண்பகல் உணவுப் பெட்டகம் (Lunchbox) : முதலில் குழந்தைகள் வீட்டிற்கு வந்தவுடன் அவர்களின் மதிய உணவுப் பெட்டகங்களை கழுவிச் சுத்தம் செய்து விட வேண்டும். இந்த விடயத்தில் காலம் தாழ்த்தக் கூடாது. 50 சதவீத கனடியக் குடும்பங்கள் இந்தப் பணியை உடனடியாக செய்வதில்லை என்பது சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் மூலம் அம்பலமாகியுள்ளது. பல நேரங்களில் புதிய காய்கறிகள் , பழங்கள், இறைச்சி போன்றவற்றையும் நம் குழந்தைகளுக்கு மதிய உணவுப் பெட்டகத்தில் கொடுத்தனுப்புகிறோம். சில மணி நேரங்களுக்குப் பின்னர் குழந்தைகள் சாப்பிட்டு முடித்த பின்னர் இவை பிற பொருட்களுடன் சேர்ந்து மாசுபடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. கலப்படம் நேர்ந்து விட்டால் நோய்க் கிருமிகள் அதி வேகமாக பரவத் தொடங்கி விடும் என்கிறார் ஆவ. ஏயையெ மருத்துவமனையின் தலைமை நுண்ணுயிரியல் வல்லுநர் னுச. றோனல்ட் லோ.

தடுக்கும் வழி: முதலில் உங்கள் குழந்தையின் மதிய உணவுப் பெட்டகத்தை தொற்றுநீக்கிகளை (Disinfectant) வைத்துத் துடைத்த பின்னர் அவற்றை நன்றாக சலவைக் கட்டிகளைப் பயன்படுத்திக் கழுவுங்கள். சலவைக் கட்டிகளின் நுரை இல்லாத அளவிற்கு தண்ணீரில் நன்றாக கழுவுவது அவசியம். அன்றைய தினத்திற்கான உணவை தயாரித்து உணவுப் பெட்டகத்தில் வைத்து விட்டீர்கள் என்றால் குழந்தைகள் பாடசாலைக்கு கிளம்பும் வரை அவற்றை வெளியில் வைக்காமல் குளிர்பதனப் பெட்டியில் வைத்து பாதுகாத்தால் நல்லது.

சிற்றுண்டி விடுதி மேசைகள் : பாடசாலைகளில் உள்ள சிறுண்டி விடுதிகளின் மேசைகள் தான் பாக்டீரியா , வைரஸ் ஆகியவற்றிற்கு உகந்த இடங்கள். இங்கே தான் பாக்டீரியாக்களும் , வைரஸ்ம் தங்களை பெருக்கிக் கொள்கின்றன. இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் நடத்திய ஆய்வில் பாடசாலைகளில் உணவு உண்ணும் இடங்களில் 44 விழுக்காடு சரியாக சுத்தம் செய்யப்படாமல் அசுத்தமாகவே உள்ளது என்ற தகவல் வெளிப்பட்டுள்ளது. நோய்தொற்று என்றால் என்னவென்றே அறியாத நம் குழந்தைகள் இது போன்ற இடங்களில் அமர்ந்து சாப்பிடும் போது அங்குள்ள பாக்டீரியாக்களுக்கும் , வைரஸ்க்கும் ஏகப்பட்ட கொண்டாட்டம். அனைத்தும் நம் குழந்தைகளின் உணவுப் பெட்டகத்தில் வந்து ஆட்டம் போட ஆரம்பித்து விடும்.

தடுக்கும் வழி: உங்கள் குழந்தையை பாடசாலைக்கு அனுப்பும் போதே தொற்றுநீக்கி துடைப்பான்களை கொடுத்தனுப்புவதுடன் , சாப்பிடத் தொடங்கும் முன்னர் மேசையை துடைப்பானால் துடைத்துப் போட்டு விட்டு உணவுப் பெட்டகத்தை திறக்குமாறு அறிவுறுத்துங்கள்.

பழங்களும் , காய்கறிகளும் : ஏற்கனவே செய்து வைக்கப்பட்ட காய்கறிகள் , புதுப் பழங்களை உணவுப் பெட்டகங்களில் வைத்து குழந்தைகளுக்கு கொடுத்தனுப்புவது எளிது தான். அதே நேரத்தில் இறைச்சி உணவுகளை சரியாக சமைக்கா விட்டால் உணவு மூலமான நோய்கள் நிச்சயமாக குழந்தைகளுக்கு பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

தடுக்கும் வழி: குழந்தைகளுக்கு கொடுத்தனுப்பும் பழங்கள் மற்றும் காய்கறிகள் நன்றாக கழுவ வேண்டும். இளஞ்சூடான தண்ணீரில் 3-5 நிமிடங்கள் வைத்துக் கழுவுதல் நல்லது. முடிந்தவரையிலும் உங்கள் குழந்தைக்கான உணவை இரவே செய்து குளிர்பதனப் பெட்டியில் வைப்பதைத் தவிர்த்து காலையில் பாடசாலை செல்லும் முன்னர் சமைத்துக் கொடுத்தால் நோய் நுண்மங்கள் பெருக்கெடுப்பதற்கான வாய்ப்புக்கள் குறையும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நம் குழந்தைகளின் கைகளே அனைத்து இடங்களையும் விட நுண் கிருமிகளுக்கு மிகவும் பிடித்தமானவை. எனவே அடிக்கடி கை கழுவும் பழக்கத்தை முதலில் குழந்தைகளிடம் ஏற்படுத்தினாலே பெரும்பான்மையான நோய்த் தொற்றுக்களை அண்ட விடாமல் தடுக்கலாம் என்கிறது உலக சுகாதார நிறுவனம். கழிவறைகளைப் பயன்படுத்திய பின்னரும், உண்பதற்கு முன்னரும் கண்டிப்பாக கைகளை கழுவும் பழக்கத்தை முதலில் குழந்தைகளிடம் கொண்டு வாருங்கள். கைகளை நன்றாக கழுவாமல் கண், மூக்கு , வாய் ஆகியவற்றில் குழந்தைகள் கை வைக்குமானால் நோய்த் தொற்று வேகமாகப் பரவி மிகப் பெரும் ஒவ்வாமைக் கோளாறுகள் கூட ஏற்பட்டு விடக் கூடும்.

எனவே பெற்றோர்களே உஷார்!! நோயற்ற உங்கள் குழந்தையின் எதிர்காலம் நீங்கள் அவர்களை வளர்க்கும் விதத்தில் தான் உள்ளது.

கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் ஐந்தாம் ஆண்டு குழிப் பந்தாட்டப் போட்டிகள்

வருடந்தோறும் குழிப் பந்தாட்டப் போட்டிகளை நடத்தி வரும் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான போட்டிகள் அஜெக்ஸில் உள்ள லுநயச புசநயம புழடக மைதானத்தில் செப்ரெம்பர் 5 ஆம் திகதியன்று வெகு சிறப்பாக நடந்து முடிந்தது. கொட்டித் தீர்த்த மழைக்கு நடுவிலும் பார்வையாளர்கள் அனைவரும் போட்டியை ரசித்தது கண் கொள்ளாக் காட்சியாகவும் அமைந்தது.



குழிப் பந்தாட்டப் போட்டிகளுக்காக பல தரப்பட்ட வயதினரும் மைதானத்தில் கூடினார்கள். துவக்க நிலை ஆட்டக்காரர்களுக்கான போட்டிகள், அனுபவசாலிகளுக்கான போட்டிகள் எனப் பிரித்து குழிப்பந்தாட்டம் நடைபெற்றது. கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மைக் அகிலன் நன்றி கூறி உரையாற்றிய பின்னர் போட்டிகள் முடிவுக்கு வந்தது. இந்த போட்டிகளில் சேகரிக்கப்பட்ட நிதி ஸ்காபுறோ மருத்துவ அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

நிதியை பெற்றுக் கொண்ட ஸ்காபுறோ மருத்துவ அறக்கட்டளைத் தலைவர் மைக்கேல் மாசா , ஆண்டு தோறும் பல வழிகளில் ஸ்காபுறோ மருத்துவமனைக்கு நிதி திரட்டி வழங்கி வரும் கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் முயற்சியைப் பாராட்டினார். இந்த நிதியின் மூலம் ஸ்காபுறோ மருத்துவமனைக்குத் தேவைப்படும் உபகரணங்கள் வாங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மனம் விரும்பியது போல் பிராம்டனில் வீடு வாங்க விற்க அழையுங்கள்
CALL BEFORE YOU LIST & SEE THE DIFFERENCE

FOR SALE $529,900




Bellamy/Kingston Rd. (Scarborough ON)

Bedrooms: 3+1 Washrooms: 2

Great Opportunity To Own In The Heart Of Scarborough Village. This Immaculate Home Has Been Prof Reno'd Top 2 Bottom W/Separate Entrance To Finished Bsmt With A Large Rec Room,Walk Out,Bedrm,Kit.,4Pc Washrm & Laundry Rm.Beautiful Designer Kit. W/Granite Counter,Backsplash,Center Island & Pot Lights.Gorgeous Open Concept.Gleaming Hardwood Flrs Thru-Out The Main Flr.Walking Distance To Eglinton Go-Station.2 Car Garge W/Pool Size Drive Way.

Brand New S/S(Fridge,Stove,B/I Dw & Hoodfan) Washer,Dryer,Potlights,New Ac,New Furnace,Blinds & All Elf's. You Can Park Up To 8 Cars.No Side Walk!!55X140 Lot,Close To Bluffs, Marinas & R.H.King Academy.Gas Fireplace In The Bsmt

FOR SALE $429,900



Chinguacousy/Drinkwater (Brampton ON)

Bedrooms: 3 Washrooms: 4

Pride Of Ownership!!Backing On To Vivians Woods! Absolutely Stunning Home W/Fin Bsmt.Located In One Of The Most Convenient & Mature Neighbourhoods.Spotless,Clean,Well Kept & Cared For Home.Beautiful Interlocking & Front & Back. Gleaming New Hardwood Flrs.Beautiful Layout Thru-Out.Cozy Family Rm W/Fireplace.Skylights In The Kitchen! Main Flr Laundry.Bsmt Offers Spacious Entertainment Area.

New Roof,Newer Furnace,B/I Microwave,Fridge,Stove,B/I Dishwasher,All Elf's,Window Coverings..Excluded: Fireplace In The Bsmt & Fridge In The Bast.Ravine!! Ravine! Ravine! Ravine!

FOR SALE $974,500



McVean / Riverstone (Brampton ON)

Bedrooms: 5+1 Washrooms: 6

Astonishingly Beautiful House W/Breathtaking Golf Course Ravine View,Located In Prestigious River Stone Community. Over 5400 Sqft Living Space.Upgraded Kitchen W/Granite Counter,Glass Mosic Backsplash,Maple Cabinets,Break-Fast Bar & Eat-In Area.Coffered Ceiling In The Dining Rm.Gleaming Maple Hardwood Flrs,Oak Staircase W/Rod Iron Railing & Skylight Over The Stairs.Gorgeous Master W/Sitting Area.Spa Like Ensuite & W/I Closet.

Main Floor Office & Walk-In Closet In The Front Foyer & Access To Garage From Inside.Second Flr Laundry.Professionally Finished Basement W/ Rec. Rm,Living Rm,1 Bedrm,2 Washroom,Laundry Room & Storage.3 Car Garage (Tandem).



Sold for 100% of asking



Sold for 100% of asking





Sold for 95% of asking



HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future
REALTY INC., BROKERAGE*

TEL: 905.201.9977
FAX: 905.201.9229

205-7 Eastvale Drive
Markham Road, Ontario L3S 4N8

Ruby Thambiah
SALES REPRESENTATIVE

416.999.5337
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com

Top Producer: 2009, 2010, 2011 *

Top 5% in Canada: 2009, 2010, 2011 **



Royal Brokers

Customer Appreciation Cruise 2012




Royal Brokers Corporation

416.315.8100
TEL 416.298.4722 FAX 416.298.4664

80 Nashdene Rd., Unit B 25-26
Toronto ON M1V 5E4

மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
சுதந்திர தமிழீழம் மலர்ந்திடும்
மிக விரைவில் நான் வானத்தில் இருந்து வாழ்த்துவேன்



Sivavathani Prabaharan
உருவாகிக் கொண்டிருக்கும் குறும் திரைப்படம் ஒன்றின் தயாரிப்பு
கனடாவில் உருவாகும் ஒரு குறும் திரைப்படத்தில் முள்ளிவாய்க்கால்
இறுதி நாட்கள் பற்றிய கனதியான ஒரு கரு சொல்லப் படுகின்றது
இந்த திரைப் படத்தில். இதில் சிறு பாத்திரத்தில் என் மகளும் நடித்திருக்கின்றாள்.
தாயகக் காட்சிகள் போல் இருக்கின்றனவா?
இவை தாயக நினைவில் வாழும் எம் இளையோர் படைப்புகளில் ஒன்று.



Ramanan Gunaseelan
ஒரு நொடி
துணிச்சல் இருந்தால்
இறந்து விடலாம்!

ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் இருந்தால்
ஜெயித்து விடலாம்!!"

MP Rathika Sitsabaiesan's
Scarborough Rouge River Community BBQ
September 15, 2012

Malvern Walk for Change
Sunday, September 30, 2012
Malvern Walk for Change is an initiative to reach Malvern residents and engage in conversations about various issues and needs in our neighbourhood.
We will be going door to door and having dialogues about ways to get involved in our neighbourhood to address our social and economic needs.
September 30th, 2012

e-குருவியும் Facebook

"சுபவீனின் சுபகானம்" இறுவெட்டு வெளியீடு
அன்புடையீர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 29ம்திகதி மாலை 5மணிக்கு
கனடா சிறீ ஐயப்ப இந்து ஆலய மண்டபத்தில் "சுபவீனின் சுபகானம்"
இறுவெட்டு வெளியடப்பட உள்ளது. அத்தருணம் தங்கள் அனைவரையும்
வருகைதந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.
அழைப்பு திரு திருமதி பாவானந்தன் 416-261-1850

Vdag Valvai
நன்றி நவில்கின்றோம்!....
1000 பாடசாலைகள் திட்டத்தின்கீழ் வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி தெரிவு
அரிய இவ்வாய்பினை பெறுவதற்காக தனது நாற்பதாண்டு கால கல்வி மற்றும்
நிர்வாகத்துறை அனுபவத்தை பயன்படுத்தி வெற்றிகொண்ட
எமது நகரபிதா திரு.நடராஜா அனந்தராஜ் அவர்களிற்கு மனதார நன்றி சொல்லும்
வல்வெட்டித்துறை மக்களுடன் valvai.com மும் இணைந்து தனது நன்றியை
தெரிவிப்பதில் பெருமை கொள்கிறது.

CTCC
The quarterly meeting will take place, on the 26th of this month at the Delta Toronto East Hotel, 2035 Kennedy Rd.
We will have couple of presentations and elect a three member team to work as a nomination committee to help the process to elect the new Board members for the coming new year.
As a valued member of Chamber,your participation and input is very much appreciated. Kindly, diarize this date and see you all on the 26th. Please, note the registration starts at 6:15 PM.
Sincerely,
Santha Panchalingam



உன்னை மதிச்சு Tag பண்ணுனா, நீ என்ன பண்ணனும் ??
சொல்லு செல்லம் நீ என்ன பண்ணனும் ??
ஒன்னு comment பண்ணனும் , இல்ல like பண்ணனும் !!
அத விட்டுட்டு ஏன் untag பண்ணற !!
இல்ல தெரியாம தான் கேட்குறேன் ,
நீ என்ன அவ்ளோ பெரிய அப்பாடக்கரா ???
வருசத்துக்கு ஒரு தடவ Log-in பண்ணுற உனக்கே, அவ்ளோ அதுப்புனா,
Daily Log-in பண்ணுற எங்களுக்கு எவ்ளோ அதுப்பு இருக்கும் !!!
ஒழுங்கா Comment பண்ணு இல்ல மூஞ்சில பூரான் விட்ருவேன்



மேள தாளங்கள் முழங்க போர்ட் குடும்பத்தினர் அளித்த
திறந்த வெளிப் பெரும் விருந்து – இகுருவி சிறப்புத் தொகுப்பு (காணொளி)

கடன் தொல்லையில் சிக்கித் தவிக்கிறது
Yellow Media
நிறுவனத்தின் கோரிக்கையை ஏற்க முதலீட்டாளர்கள் மறுப்பு



கனடாவில் முழுவதிலும் உள்ள தொழில் நிறுவனங்களின் தகவல் தொகுதி வெளியிடுதல், விளம்பர யுக்திகளை கையாளுதல் உள்ளிட்ட பல பணிகளைச் செய்து வரும் மிகப் பெரிய நிறுவனங்களுள் ஒன்றான Yellow Media கடந்த சில மாதங்களாகவே கடன் தொல்லையில் சிக்கித் தவித்து வந்தது. மொன்றியலில் இயங்கி வரும் இந்நிறுவனத்தில் பல முக்கிய சில்லறை வர்த்தகர்களும், மேலும் பல நிறுவனங்களும் முதலீடு செய்துள்ளன.

முதலீட்டாளர்கள் கலந்து கொண்ட சந்திப்பு நிகழ்ச்சி ஒன்றிற்கு நேற்று இந்நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. நிறுவனத்திற்கு $1.8 பில்லியன் கடன் சுமை ஏற்பட்டுள்ளதால் முதலீட்டாளர்களின் மாற்றத்தக்க கடன்பத்திரங்கள் அனைத்தும் பங்குகளாக மாற்றித் தரப்படும் என கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

நிறுவனத்தின் இந்த முடிவினை ஏற்க முதலீட்டாளர்கள் மறுத்து வருகின்றனர். கடன் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீட்டினை திடிரென பங்குகளாக மாற்றப் போவதாக எல்லோ மீடியா கூறுவது ஏற்கத்தக்கதல்ல என முதலீட்டாளர்கள் கூறி வருவதுடன், நிறுவனத்தின் இந்த போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் வழக்குத் தொடரப்படும் எனவும் எச்சரித்துள்ளனர்.

ஆப்பிள் நிறுவனத்தின் புதிய ஐபோன் 5



கடந்த ஜூன் மாதம் முதற்கொண்டே ஆப்பிள் நிறுவனம் புதிய ஐபோன் 5 வெளியி டிருப்பதாக பல தகவல்கள் வெளியானது. இந்நிலையில் தொழில் நுட்ப காரணங்கள் சிலவற்றால் இதனை தள்ளிப் போட்டு வந்த அந்நிறுவனம் இறுதியில் எதிர்வரும் செப்ரெம்பர் 12 இல் ஐபோன் 5 அறிமுகப்படுத்தப் போவதாக அறிவித் துள்ளது.

புதிதாக வெளியாகவுள்ள இந்த ஐ-போன் 4.6 இன்ச் அளவு கொண்டதாகவும், துல்லியமான படங்களுக்காக, ரெட்டினா திரையைக் கொண்டதாகவும் இருக்கும் என நம்பப்படுகிறது. நவீன தொழில் நுட்ப உலகில் ஆப்பிளின் ஐபோன்-5 ஸ்மார்ட்போனிற்கு பெரிய வரவேற்பு மக்களிடையே நிலவுகிறது என்பதை மட்டும் உறுதியாகக் கூற முடியும்.

ஐபோன்-5 வெளியான ஒரு வார கால கட்டத்திற்குள் 6 முதல் 10 மில்லியன் ஐபோன்கள் விற்றுத் தீர்ந்து விடும் என கணித்திருக்கின்றனர் நிபுணர்கள்.

வரியில்லா சேமிப்புக் கணக்கில் (TFSA) குளறுபடி 76,000 கனடிய மக்களுக்கு வருமான வரிக் கழகம் எச்சரிக்கை

TFSA எனப்படும் வரியில்லா சேமிப்புக் கணக்குகளின் விதிமுறைகளுக்கு புறம்பாக பல ஆயிரக் கணக்கான கனடிய மக்கள் இதனை பயன்படுத்தி வருகின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அதிகப்படியான பங்களிப்புத் தொகையை வரியில்லா சேமிப்புக் கணக்குகளில் வைத்துக் கொண்டு பயன்படுத்தி வந்த 103,000 கனடிய மக்களுக்கு வருமான வரிக் கழகம் எச்சரிக்கை அறிவிப்பொன்றினையும் அனுப்பியுள்ளது.

வரியில்லா சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் தொகைக்கும் இவற்றிலிருந்து எடுக்கப்படும் தொகைக்கும் வரி கட்ட வேண்டியதில்லை என்பதால் பலர் விதிமுறைகளை மீறி அதிகப்படியான தொகையை இந்த கணக்குகளில் சேமித்து வைக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

கடந்த வருடம் 72,000 பேருக்கு இது போன்ற எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டது. இந்த வருடம் விதிமுறைக்கு புறம்பாக வரியில்லா சேமிப்புக் கணக்கினை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்துள்ளதால் 103,000 பேருக்கு எச்சரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இகுருவி வாசகர்கள் வரியில்லா சேமிப்புக் கணக்குகள் குறித்து முழுமையான தகவல்களையும், விதிமுறைகளையும் http://www.tfsa.gc.ca/ என்ற இணைய தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

2100 ஊசிகளை தலையில் குத்தி
கனடியத் ஈழத் தமிழர் மீண்டும் உலக சாதனை



கனடா வாழ் ஈழத்தமிழரான சிவயோகநயகம் மோகனதாஸ் தன்னுடைய முந்தைய சாதனையை தானே முறியடித்துள்ளார். கடந்த ஞாயிறன்று மார்க்கமில் உள்ள விருந்தினர் மாளிகையில் மோகன்தாஸ் 2100 ஊசிகளை தலையில் குத்தி இந்த சாதனையை படைத்துக் காட்டினார். 37 வயதாகும் மோகன்தாஸ் கன ரக பார வண்டிகளை இயக்கும் பணியாற்றி வருகிறார். இவருக்கு மூன்று ஆண் பிள்ளைகள் உள்ளனர். 23 வயதில் சிறிலங்காவிலிருந்து கனடா வந்தது குடியேறியவர் சிவயோகநாயகம் மோகன்தாஸ்.

அமைதியாகவும், புன்னகையுடனும் எப்போதும் தோற்றமளிக்கும் மோகனதாஸ் சாதனை படிப்பதிலும், பழைய சாதனைகளை முறியடிப்பதிலும் அலாதி பிரியம் கொண்டவர். கடந்த ஆண்டு டிசம்பர் 3 ஆம் திகதியன்று ஸ்காபரோ குயின்ஸ் பலசில் உலக சாதனை படைக்கும் முயற்சியில் இறங்கிய மோகன்தாஸ், இத்தாலி நாட்டில் சீனரான வெய் ஷெங்க்சு (Wei Shengchu) என்பவரால் 2009 இல் கின்னஸ் சாதனையாக தலையில் 2009 ஊசிகள் குத்தப்பட்டு இருந்ததை முறியடித்து தன் தலையில் 2,025 நுண்துளை ஊசிகளை குத்திக் காட்டினார்.

2011 இல் இவர் படைத்த உலக சாதனைக்கான சான்றிதழ் கடந்த வாரம் மோகன்தாசுக்கு கிடைத்ததையொட்டி அதனை முறியடிக்கும் விதத்தில் அதிகப்படியான ஊசிகளை தலையில் குத்திக் கொள்ளும் முயற்சியில் மோகன்தாஸ் இறங்கினார். இந்த முறை வெறுமனே தலையில் ஊசி குத்திக் கொள்ளும் உலக சாதனையோடு மட்டும் நின்று விடாமல் 48 மணி நேரங்களுக்கு தலையில் குத்தப்பட்ட ஊசிகளுடன் இருந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டியும் உள்ளார் மோகன்தாஸ்.

கனடிய தொழில் துறையில் தெற்காசிய மக்களின்
பங்களிப்பு மிக முக்கியமானது கொண்டாட்டம் நிகழ்வில்
ஒன்ரோறியோ குடிவரவுத்துறை அமைச்சர் சார்லஸ் சௌசா புகழாரம்



கடந்த இரு நாட்களாக ரொறொன்ரோவில் நடைபெற்ற " கொண்டாட்டம் 2012 " நிகழ்வினில் பல முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ஒன்ரோறியோவின் குடிவரவுத்துறை அமைச்சர் சார்லஸ் சௌசா இந்நிகழ்விற்கு வந்திருந்தார். இகுருவி செய்திகளுக்காக் அவரை சந்தித்த போது,

கொண்டாட்டம் நிகழ்வினில் பங்கேற்பதில் தான் பெருமை அடைவதாகவும், ரொறொன்ரோ மட்டுமன்றி கனடா முழுவதிலும் தொழில் துறையில் நிபுணத்துவம் மற்றும் தனித்தன்மையுடன் பங்காற்றி நாட்டிற்கு வலுச் சேர்ப்பவர்கள் தெற்காசிய மக்கள் என மிகுந்த உற்சாகத்துடன் அவர் கூறினார்.

கல்விக் கடன் வாங்கும் முன்னர்
நிதி ஆலோசகர்களைக் கலந்தாலோசியுங்கள்

ரொறொன்ரோவில் பட்ட மேற்படிப்பினை தொடரும் மாணவர்கள் பலர் கடுமையான கடன் சுமைகளில் தத்தளிக்கின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. இந்த அவல நிலை பாடசாலைகளிலிருந்து பட்டப்படிப்பிற்கு செல்ல விரும்பும் பலரிடம் அச்சத்தை உண்டாக்கி வருவதால் கல்விக் கடன் வாங்கும் முன்னர் மாணவர்கள் நிதி ஆலோசகர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என நிபுணர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பாடசாலைகளை விட்டு வெளியேறும் போதே கடன் சுமையுடன் வரும் மாணவர்கள் பலர் கல்லூரி படிப்பிற்காக மீண்டும் கல்விக் கடன்களுக்கு விண்ணப்பிக்கின்றனர். இது போன்று விண்ணப்பிக்கும் மாணவர்கள் பலருக்கு பணத்தை கையாளுவது குறித்து போதுமான விழிப்புணர்வு இல்லாததே கடன்கள் அதிகரிக்கக் காரணமாக அமைந்து விடுகிறது எனக் கூறுகிறார் தன்னார்வத் தொண்டு நிறுவன இயக்குனரான ஜெப்ரே ச்சுவர்ட்ஸ்.

பொதுவாக பாடசாலைகளில் இருந்து வரும் மாணவர்களில் பெரும்பான்மையானோர் நிதி சேமிப்பினை ஒரு பாடமாக படித்துக் கொண்டு வருவதில்லை என்பதால் இதற்கான அறிவுரையை வழங்குவதற்காக கல்லூரிகளில் ஆலோசகர்கள் அடங்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் மாணவர்களும், பெற்றோர்களும் கல்விக் கடன் பெறுவதற்கு முன்னர் இந்தக் குழுவின் ஆலோசனையை பெற வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுப்பெறத் தொடங்கியுள்ளன.

இதனை செய்யத் தவறினால் பட்ட மேற்படிப்பைத் தொடரும் கனடிய மாணவர்கள் பலர் கடனில் சிக்கி மீள முடியாத நிலையையே எதிர்காலத்தில் உண்டாகும் எனவும் நிபுணர் குழு எச்சரித்துள்ளது.

சைவ உணவகத்தை இந்தியாவில் திறக்க McDonald முடிவு



அமெரிக்காவின் பிரபல துரித உணவு நிறுவனமான மெக்டானல்ட்ஸ் சைவப் பிரியர்களுக்காக புதிய சைவ துரித உணவு மட்டுமே கொண்ட கடைகளை இந்தியாவில் உள்ள திறக்க முடிவு செய்துள்ளது. அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் அசுர வளர்ச்சியைப் பெற்று இதுவரையிலும் உலகெங்கிலும் பரவி, மொத்தம் 119 நாடுகளில் 33,000 துரித உணவு சங்கிலித் தொடர் கடைகளை திறந்திருக்கிறது. மெக்டானல்ட்ஸ் பெயரை பயன்படுத்தி கடை நடத்த விரும்புபவர்கள் 25 லட்சம் இந்திய ரூபாய்களையும், லாபத்தில் 2 சதவீதத்தினையும் மெக்டானல்ஸ்க்கு அளிக்க வேண்டும் என்ற நடைமுறையே தற்போது பின்பற்றப்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் மெக்டானல்ட்ஸின் புகழ் பெற்ற உணவு மாட்டிறைச்சி பர்கர் தான். இந்தியாவில் 1996-ம் ஆண்டு மெக்டானல்ட்ஸ் கடைகள் தொடங்கப்பட்டபோது இந்தியர்களின் மத உணர்வுகளை மதித்து இந்துக்கள் "புனிதமாக" கொண்டாடும் மாட்டின் இறைச்சியால் செய்யப்படும் பர்கரை தியாகம் செய்தது மெக்டானல்ட்ஸ். இந்திய சந்தைக்காக அது உருவாக்கிய மெக் ஆலு டிக்கி (உருளைக் கிழங்கு வடை) அதன் மொத்த இந்திய வருமானத்தில் 25 சதவீதத்தை தருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் ஆன்மீக நகரங்களில் கூடும் கூட்டங்களை பார்த்த அந்நிறுவனம் இந்தியாவில் தனது சந்தையை மேலும் விரிவாக்குவதற்காக அமிர்தசரஸ் பொற்கோவில் மற்றும் கட்ரா வைஷ்ணவி தேவி கோவிலுக்கு வரும் பக்தர்களைக் கவர அந்தப் பகுதிகளில் சைவம் மட்டுமே தயாரித்து வழங்கப்படும் துரித உணவுக் கடைகள் திறக்கப்படும் என அறிவித்துள்ளது. வட அமெரிக்காவில் சைவ உணவகங்களை திறக்கும் எண்ணம் இப்போது மெக்டானல்ட்ஸ் நிறுவனத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை.



ஒன்ரோறியோ மருத்துவர் சங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடர அரசு முடிவு



பல மாதங்களாக நீடித்து வரும் மருத்துவர்களுக்கான கட்டணப் பிரச்சினைகளுக்கு புதிய பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒருமித்த முடிவு காண்பதில் ஒன்ரோறியோ மருத்துவர் சங்கமும், அரசும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. சமீப வருடங்களாக நோயாளிகளின் நலன்களைப் பேணுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினைப் பாதுகாக்கும் வகையில் இரு தரப்பினரும் பேச்சு வார்த்தைகளின் மூலம் புதிய திட்டங்களை ஏற்படுத்த இசைந்துள்ளதாக இரு தரப்பிலுமிருந்தும் செய்திக் குறிப்புக்கள் வெளியாகியுள்ளன.

வரி செலுத்தும் மக்களையும், மருத்துவர்களையும் பாதிக்காத விதத்திலும் அதே நேரத்தில் நோயாளிகளின் நலன்களை பேணுவதற்கு முன்னு ரிமை கொடுக்கும் விதத்திலும் இந்த பேச்சு வார்த்தைகள் இருக்கும் எனவும் அறிவிப்புக்கள் வெளியாகியுள்ளன. இந்த வருடத்தின் முற்பகுதியில் ஏற்கனவே மருத்துவர்களுடன் அரசு பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியதில் எந்த சுமூக முடிவும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வறுக்கப்பட்ட பருப்புக்களைக் கொண்ட Mars சாக்லேட் ஆரோக்கியமற்றது



ஆரோக்கியமற்ற Mars சாக்லேட்டுக்களை விற்றதாக ஸ்காட்லாந்தில் உள்ள கடை ஒன்றின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பாதாம், வால்நெட், பிஸ்தா ஆகிய பருப்புக்களை நன்கு வறுத்து செய்யப்பட்ட இந்த சாக்லேட் ஆரோக்கியமற்றது என மார்ஸ் நிறுவனமே கடை உரிமையாளர்களிடம் அறிவுறுத்தியுள்ளதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்நிறுவனத்தின் பிற தயாரிப்புக்களான M&Ms, Snickers Bars and Hot Chocolate ஆகியவை இந்த வகையில் சேர்க்கப் படவில்லை.

மார்ஸ் சாக்லேட்டுக்களை கடந்த 20 ஆண்டுகளாக விற்று வருவதாகவும், உலகம் முழுதிலும் உள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து இதற்கு நல்ல வரவேற்பு இருக்கும் போது திடிரென மார்ஸ் நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது ஏன் என தனக்குப் புரியவில்லை எனப் புலம்புகிறார் ஸ்காட்லாந்து மதுக்கடை உரிமையாளர் ஒருவர்.

பொம்மை துப்பாக்கிகளை வைத்திருந்தாலும் கைது செய்யப்படுவீர்கள்

யோர்க் நகரவாசிகளுக்கு காவல்துறை எச்சரிக்கை

சமீப காலமாகவே சிறுவர்கள் விளையாடுவதற்கு பயன்படுத்தப்படும் பொம்மை துப்பாக்கிகளும் அச்சு அசலாக நிஜத் துப்பாக்கிகள் போலவே விற்பனையாகிக் கொண்டிருப்பதால் உண்மைத் துப்பாக்கிகளை இனங் காண்பது பெரும் சவாலான விடயமாகி வருவதாக யோர்க் நகர காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

யோர்க் நகரத் தெருக்களில் சிறுவர்கள் வைத்து விளையாடும் பொம்மைத் துப்பாக்கிகளின் சப்தம் கேட்டு மக்கள் பலர் காவல்துறையை தொடர்பு கொள்வதாகக் கூறிய அதிகாரிகள் இனி அது போன்ற நிலை ஏற்பட்டால் துப்பாக்கி போலியானதா, உண்மையானதா என்பதை கண்டறியும் வரை பொம்மைத் துப்பாக்கிகளை வைத்திருப்போர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் உறுதிபடக் கூறியுள்ளனர்.

இது போன்ற சம்பவமொன்று நேற்று நடைபெற்ற பின்னரே இந்த பிரச்சினை விஸ்வரூபமெடுத்துள்ளது. யோர்க் நகரின் நியூமார்க்கெட் ஹோம் பகுதியில் துப்பாக்கிகளை கொண்டு சுடும் சப்தம் கேட்பதாக காவல்துறைக்கு தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற அதிகாரிகள் விசாரணை நடத்தியதில் 14 மற்றும் 15 வயதுக்குட்பட்ட மூன்று சிறுவர்கள் பிடிபட்டனர். அவர்களிடமிருந்து துப்பாக்கிகளையும் அதிகாரிகள் கைப்பற்றினர்.

தாங்கள் வைத்து விளையாடும் பொம்மைத் துப்பாக்கிகள் அவை என சிறுவர்கள் கூறிய போதும் காவல்துறையால் நம்ப முடியவில்லை. துப்பாக்கியின் எடை உள்ளிட்ட அனைத்து அம்சங்களுமே நிஜத் துப்பாக்கிகள் போன்று இருந்ததால் சிறுவர்களை அவர்களின் பெற்றோர்களோடு சேர்த்து சில மணி நேரம் காவலில் வைக்க வேண்டிய நிலை போலிசுக்கு ஏற்பட்டது.

இந்த செய்தி கிடைக்கப்பெற்றவுடன் இதன் உண்மைத் தன்மையை அறிய இகுருவியின் ஆசிரியர் குழு நடத்திய ஆய்வில் சில விடயங்கள் எமக்கு புலப்படுகின்றன. அதனை கனடிய தமிழ் மக்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம்.

முதலாவதாக பொம்மைத் துப்பாக்கிகளை வைத்து விளையாடிய சிறுவர்களை காவலில் வைக்கும் அளவிற்கு வளர்ந்த தேசமான கனடாவில் நிலை ஏற்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது. சந்தையில் ஒரு விளையாட்டுப் பொருள் விற்பனைக்கு வருகிறது. அதுவும் நிஜமானது போலவே இருக்கிறதென்றால் அதனை வாங்கி பயன்படுத்த வேண்டும் என சிறுவர்கள் நினைப்பது இயல்பான ஒன்றே.

இது போன்ற விசாரணைகளில் காவல்துறையின் நேரமும் கணிசமாக வீணடிக்கப்படுகிறது என்ற பட்சத்தில் மக்களை எச்சரிப்பதை விட இந்த விளையாட்டுப் பொருளினை கனடாவில் தடை செய்து விட்டால் என்ன என்பது தான் நம் முன்னர் உள்ள கேள்வி.

இரண்டாவதாக air gun சிறுவர்களுக்கு வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் இது தொடர்பான முழுமையான அறிவுரைகளை அவர்களுக்கு வழங்க வேண்டும். எந்த இடத்தில் air gun பயன்படுத்தலாம். மற்றவர்களுக்குத் தீங்கில்லாமல் யசை பரெ பயன்படுத்துவது எப்படி உள்ளிட்ட பல விடயங்கள் சிறுவர்களுக்கு போதிக்கப்பட்டால் இதனால் பிரச்சினை ஏற்படுவது குறையும்.

இந்த விடயம் தொடர்பில் காவல்துறை தெரிவித்துள்ள சில தகவல்கள்:

ஆயுதங்கள் தொடர்பான குற்றம் குறித்து காவல்துறைக்கு ஏதேனும் அழைப்புக்கள் பொது மக்களிடமிருந்து வரும் பட்சத்தில் , விசாரணையில் ஆயுதம் உண்மையானதா என கண்டறியும் வரையிலும் அவை நிச ஆயுதமாகவே கணக்கிலெடுக்கப்படும்.

உணமையான துப்பாக்கிகள் இல்லை எனத் தெரிய வந்த பின்னரும் , காற்றுத் துப்பாக்கிகளால் வேறு யாரேனுக்கும் தொந்தரவு ஏற்பட்டிருந்தால அதுவும் குற்றமாக கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

பொம்மைத் துப்பாக்கிகளை பயன்படுத்தியதில் மனிதர்கள் , விலங்குகள் , மற்றும் அசையும் , அசையாச் சொத்துக்களுக்கு சேதமேற்பட்டிருப்பதாகத் தெரிந்தால் கனடிய குற்றவியல் சட்டங்களின் படி இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் இதனால் ஏற்படும் இழப்பீடுகளுக்கும் சம்பந்தப்பட்டவரே பொறுப்பு.

Air Gun வாங்குவதற்கு முன்னால் அதனை பாதுகாப்பாக பயன்படுத்துவது எப்படி என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு அருகில் உள்ள சட்ட அலுவலகத்திற்குச் சென்று உங்கள் பகுதியில் யுசை புரெ பயன்படுத்த அனுமதி உள்ளதா என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

திறந்த வெளிகள், பொது இடங்கள், பூங்கா ஆகியவற்றில் யுசை புரெ பயன்படுத்தக் கூடாது.

உங்களுக்குச் சொந்தமில்லாத பிற இடங்களில் துப்பாக்கி பயன்படுத்துவதாக இருப்பின் அந்த இடத்தின் உரிமையாளரிடம் அனுமதி பெறுங்கள்

30 வயதுக்கு முன்னர் மார்பக எக்ஸ்-ரே ஆபத்து என்கிறது புதிய ஆய்வு



30 வயதிற்கு முன்னர் மேம்மோகிராம், மார்பக எக்ஸ்–ரே உள்ளிட்டவற்றை எடுத்துக் கொள்ளும் பெண்கள் மட்டுமல்ல அவர்களின் பரம்பரைக்கும் மார்பக புற்று நோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்ற குண்டை தூக்கிப் போட்டுள்ளது சமீபத்தில் வெளியான ஐரோப்பிய ஆய்வு. BRCA1 மற்றும் BRCA2 மரபணுக்களில் ஏற்படும் கோளாறுகளாலேயே மார்பகப் புற்று நோய் ஏற்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. மார்பகத்தை எக்ஸ்–ரே எடுக்கும் உண்டாக்கும் கதிரியக்கத்தால் இந்த மரபணுக்கள் பாதிக்கப்படுகின்றன என்பதை இந்த ஆராய்ச்சி சுட்டிக்காட்டியுள்ளது.

கதிரியக்கத்தின் போது மரபணுக்களில் ஏற்படும் சேதத்தை சரி செய்யும் முக்கிய வேலையை BRCA செய்கிறது. அதிலும் குறிப்பாக ஏற்கனவே பாரம்பரியமாக மார்பக புற்றுநோய் வரக் கூடிய வாய்ப்புள்ள பெண்களுக்கு இந்த மரபணுக்கள் கதிரியக்கத்தால் உண்டாகும் சேதத்தை சரி செய்ய முடியாமல் வலுவிழந்து விடுவதால் மார்பக மற்றும் கருப்பை புற்றுநோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்கிறது ஆராயச்சி.

இதனாலேயே பிரித்தானியா, நெதர்லாந்து மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் BRCA திசு மரபு பிறழ்வு உள்ள பெண்களை மருத்துவர்கள் எக்ஸ்–ரே எடுக்கச் சொல்வதற்குப் பதிலாக MRI எனப்படும் காந்த அதிர்வு அலை வரைவு சோதனைகளுக்கு உட்படுத்துவதாகவும் ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றொறொன்ரோ போக்குவரத்துக் கழக சுத்தப்படுத்தும் பணிகளை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்க கரேன் ஸ்ரின்ட்ஸ் முடிவு



றொறொன்ரோ போக்குவரத்துக் கழக பேருந்து மற்றும் தொடரூந்து நிலையங்களில் குப்பைகளை அகற்றுதல் மற்றும் கழுவறைகளை சுத்தப்படுத்துதல் ஆகிய பணிகளை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கவும் இதனால் நிறுவனத்திற்கு ஏற்பட்டு வரும் பல மில்லியன் டொலர்கள் இழப்பீட்டினை சரிக்கட்டவும் றொறொன்ரோ போக்குவரத்துக் கழகத் தலைவர் கரேன் ஸ்ரின்ட்ஸ் முடிவெடுத்துள்ளார். இந்த மாற்றங்களை சுட்டிக்காட்டிய கடிதங்களையும் நகர சபைத் தலைவர்களுக்கு ஸ்ரின்ட்ஸ் அனுப்பியுள்ளார்.

11 குப்பை சேகரிக்கும் பணிகள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கழுவறை சுத்தப்படுத்தும் பணியிடங்களையும் தனியார் நிறுவனங்களிடம் ஒப்பந்த அடிப்படையில் விட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகர சபையில் இதற்கான அங்கீகாரம் கிடைக்கும் பட்சத்தில் இரண்டு ஊர்தியகங்களில் தற்போது இருக்கும் 159 பேரூந்து சுத்தப்படுத்தும் பணியிடங்களும் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

இதனால் பல மில்லியன் டொலர்கள் றொறொன்ரோ போக்குவரத்துக் கழகத்திற்கு மிச்சமாகும் எனக் கூறி வரும் ஸ்ரின்ட்ஸ் இது குறித்த துல்லியமான விபரங்களை அறிவிக்காதது பலரிடையே அதிருப்தியையும் உண்டு பண்ணியுள்ளது. மேலும் சுத்தப்படுத்தும் பணிகளை கூட்டு ஒப்பந்த அடிப்படையிலேயே தனியாருக்கு விட முடிவு மேற்கொண்டிருப்பதால் ஏற்கனவே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ள யாருக்கும் வேலை பறி போகாது எனவும் ஸ்ரின்ட்ஸ் விளக்கமளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடோடிகளாக பலரை ஒன்றோரியோவிற்குள் அனுப்பும் சதிச்செயலில் சர்வதேச குற்ற வளையம் ஈடுபட்டிருப்பது அம்பலம்


- கனடிய மூத்த குடிமக்களுக்கு காவல்துறை எச்சரிக்கை -

ரோமனியாவிலிருந்து ஒன்றோரியோ பகுதிக்குள் நாடோடிகள் என்ற பெயரில் பலர் நுழைந்து வருவதை துர்ஹம் நகர காவல்துறையினர் கண்டறிந்துள்ளனர். இது தொடர்பில் நேற்று 34 பேர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 263 பேர் மீது குற்றமும் சுமத்தப் பட்டுள்ளது. இது போன்ற சதிச் செயல்களின் மூலம் கனடாவிற்குள் வருபவர்கள் பின்னர் அகதி உரிமை கோரி விண்ணப்பம செய்வதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

பலரை திசை திருப்பி நூதன கொள்ளையடிப்பதிலும் இக்குழுக்கள் ஈடுபட்டுள்ளன என்ற விபரமும் தெரிய வந்துள்ளது. பெரும்பாலும் நகைக் கடைகள், கனடிய மூத்த குடி மக்களை இலக் காக வைத்து திருட்டு சம்பவங்களில் ஈடுபடும் இவர்கள் சில நேரங்களில் காவல்துறையினரிடமும் கைவரிசையைக் காட்டி விடுகின்றனர் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

குழுக்களாக செயல்படும் இவர்களில் ஒருவர் அனைவரையும் திசை திருப்பும் வேளையில், உடன் வந்தோர் ஆண், பெண், சிறுவர்கள் என அனைவரிடமும் உள்ள முக்கிய பொருட் களையும், தங்க நகைகளையும் கொள்ளையடித்துச் செல்கின்றனராம். சர்வதேச குற்ற வளையம் ஒன்றின் உதவியுடன் 400 பேர் இது போன்று கனடாவிற்குள் ஊடுருவி இருக்கக்கூடும் எனவும் காவல்துறையினர் சந்தேகிக்கின்றனர்.

அடுத்து என்ன செய்யப் போகிறார் மக்கென்றி?



பெரும்பான்மை அரசாக ஆட்சி பீடத்தில் அமர வேண்டும் என்பதற்காகவே இரு தொகுதிகளில் இடைத் தேர்தல்களை உண் டாக்கி அதில் வெற்றி பெறத் துடித்த ஒன்றோறியோ முதல்வர் மக்கென் றியின் கனவு பொய்த்துப் போய் விட்ட நிலையில் அடுத்ததாக என்ன செய்யப் போகிறார் மக்கென்றி என்ற கேள்வி எழுந்துள்ளது.

கிட்செநேர்–வாட்டர்லூ தொகுதியில் இடைத்தேர்தலை உண்டுபண்ணுவதற்காகவே இத்தொகுதியின் ஒன்ரோறியோ ப்ரோக்ரேச்சிவ் கோன்செர்வேற்றிவ் கட்சி சட்டசபை உறுப்பினரான எலிசபெத் விட்மரை வேலைத்தளப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி கழகத்தின் தலைவராக நியமித்தார் முதல்வர் மக்கென்றி. அதே போன்றே Vaughan தொகுதியிலும் சொர்பராவின் செல்வைக்கைத் தக்க வைத்துக் கொண்டு அதன் மூலமாக இளைய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரை தேர்தலில் முன்னிலைப்படுத்தவும் திட்டமிட்டார் மக்கென்றி.

மக்கேன்றியின் எயரபாயெ தொகுதி இடைத்தேர்தல் திட்டம் நினைத்தபடியே லிபரல் கட்சிக்கு வெற்றியை தேடித் தந்தது என்ற போதிலும் கூட கிட்செநேர்–வாட்டர்லூ தொகுதியில் லிபரல் கட்சி மூன்றாமிடம் பெறும் என்பதை யாருமே எதிர்பார்க்கவில்லை. அரை மில்லியன் டொலர்களுக்கும் மேலாக செலவு செய்து இரண்டு தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்திய பின்னரும் சிறுபான்மை அரசாகவே நீடிக்க வேண்டிய நிலை ஏற்படுள்ளது மக்கென்றி உட்பட அவர் அரசில் அங்கம் வகிக்கும் அனைவருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நான்கு தேர்தல்களில் லிபரல் கட்சியின் தலைவராக பணியாற்றி ஒன்பது ஆண்டு காலமாக ஒன்ரோறியோ முதல்வராக பதவி வகித்த அனுபவம் உள்ளவரான மக்கென்றி கிட்செநேர்–வாட்டர்லூ தொகுதியில் இடைத்தேர்தலை உண்டாக்கியதும், அதே நேரத்தில் ஆசிரியர்களுடன் மோதல் போக்கை கடைப்பிடித்ததுமே இதற்கு காரணமாக இருக்கக் கூடும் என கருதப்படுகிறது. சிறுபான்மை அரசாக நீடிப்பதை ஆரம்பம் முதற்கொண்டே வெறுத்து வரும் மக்கென்றியின் அடுத்த திட்டம் என்னவாக் இருக்கும் என்பதே தற்போது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இம்மாத இறுதியில் லிபரல் கட்சியின் ஆண்டு பொதுக்கூட்டம் ஒட்டவாவில் நடைபெற உள்ளது இதன் பின்னராகவே லிபரல் கட்சி இந்த பிரச்சினைக்கு என்ன முடிவெடுக்கும் என்பது தெரிய வரும்.

வாகன விபத்தில் சிறிலங்கக் குடும்பம் பலியாகக் காரணமான இளைஞர் பிணையில் விடுவிப்பு



கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி குயின் எலிசபெத் நெடுஞ்சாலையில் நிகழ்ந்த வாகன விபத்தில் சிறிலங்கா விலிருந்து கனடாவில் குடியேறிய ஜயந்த நெய்ல் விஜெரத்னே, 49 மற்றும் 16 வயதாகும் அவரது மகள் எலீஷா நிமானியும் சம்பவ இடத் திலேயே உயிரிழந்தனர். விஜெரத் னேவின் மனைவி விபத்தில் படுகாய மடைந்து இன்னமும் மருத்துமனை யிலேயே சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பான வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது.

கவலை தோய்ந்த முகத்து டனும், அனைத்தையும் இழந்து விட்ட விரக்தியுடனும் சுற்றத்தின ருடன் நீதிமன்றில் காத்துக் கொண்டிருந்தார் விபத்தில் தந்தையையும், தங்கையையும் பறி கொடுத்த ப்ரியன் விஜெரத்னே. விபத்துக் காரணமான இளைஞர் சபஸ்டியன் ப்ரோசா குடி போதையில் வாகனம் ஓட்டி இருவர் பலியாகக் காரணமானதாக அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு அவரும் நீதிமன்ற அறைக்கு கொண்டு வரப்பட்டார். நீதிமன்ற அறையில் நடைபெற்ற இருவரிடமும் விசார ணைகளுக்குப் பின்னர் $100,000 தொகையைச் செலுத்தி ப்ரோசாவின் தந்தை அவரை பிணையில் வெளியில் கொண்டு வந்துள்ளார். இருப்பினும் கடுமையான வீட்டுக் காவலிலேயே ப்ரோசா தொடர்ந்தும் வைக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ப்ரோசாவை முதன்முதலாக பார்த்தவுடன் தனக்கு அதிர்ச்சியும் கோபமுமே ஏற்பட்டதாக ஊடகங்களிடம் விவரித்துள்ளார் ப்ரியன் விஜெரத்னே. இளைஞர்கள் குடி போதையில் செய்யும் இது போன்ற தவறுகளால் பலரது குடும்பம் நிர்கதிக்கு ஆளாக்கப்படுவதை இனியாவது இளைய சமுதாயம் உணர்ந்து குடித்து விட்டு வாகனம் ஓட்டக் கூடாது என்ற வேண்டுகோளையும் ப்ரியன் விஜெரத்னே விடுத்துள்ளார்.

ஹார்ப்பர் - புடின் சந்திப்பு

சிரியா விவாகாரத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவுமாறு புடினுக்கு ஹார்ப்பர் அழைப்பு



ரஷ்யாவில் நடைபெற்று வரும் ஆசிய–பசிபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் ஸ்ரிபன் ஹார்ப்பர் நேற்று விளாடிமிர் புடினைச் சந்தித்து இரு நாட்டு வர்த்தக உறவுகள் குறித்து உரையாடியுள்ளார். இந்த சந்திப்பின் போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினிடம் சிரிய பிரச்சினை குறித்தும் இதில் ரஷ்யா எடுத்து வரும் நிலை மேற்கத்திய நாடுகளை கவலை யடையச் செய்துள்ளதாகவும் ஸ்ரிபன் ஹார்ப்பர் பேசியதாகக் கூறப்படுகிறது.

எந்த ஒரு நாட்டின் பிரச்சினையிலும் மேற்கத்திய நாடுகள் நினைப்பது போல் அதிகாரங்களின் மூலமோ , பிற நாட்டு பலத்தை பயன்படுத்தியோ தீர்வு காண்பதில் ரஷ்யாவிற்கு என்றுமே உடன்பாடு இருந்ததில்லை என ஸ்ரிபன் ஹார்ப்பரிடம் பகிரங்கமாக விளாடிமிர் புடின் கூறி விட்டதாக செய்திகள் கசிந்துள்ளன.

ஜனாதிபதி பசீர் அல் அசாத் பதவியில் நீடிக்க வேண்டுமா என்பது போன்ற விடயங்களில் யாருக்கும் சார்பாக ரஷ்யா பேச விரும்பவில்லை என்பதையும் அதனை தீர்மானிக்கும் பொறுப்பு முழுக்க முழுக்க அந்நாட்டு மக்கள் கையில் தான் உள்ளது என்ற முந்தைய நிலையையே ரஷ்யா எப்போதும் கடைபிடிக்கும் எனக் கூறி ஹார்ப்பரின் அழைப்பை புடின் மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

ஆனால் சந்திப்பிற்குப் பின்னர் ஊடகங்களைச் சந்தித்த ஸ்ரிபன் ஹார்ப்பர் இரு நாட்டு உறவுகள் பற்றி மட்டுமே புடினிடம் பேசியதாக கூறியதோடு சிரியா தொடர்பான பிற கேள்விகளுக்கு பதிலளிக்க மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொறுத்தது போதும் துப்பாக்கிச் சூடு கலாச்சாரங்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வாருங்கள்

ஸ்காபுறோ நகரவாசிகள் மாநகர அரசிடம் வேண்டுகோள்

கடந்த சில வாரங்களுக்கு முன்னரே ஸ்காபுறோ வீடொன்றில் நடந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் ரொறொன்ரோ மாநகரையே உலுக்கி முடிவுக்கு வந்துள்ள நிலையில் நேற்று காலை வேளையில் மீண்டும் ஒருவர் துப்பாக்கியினால் சுடப்பட்டு சடலமாக மீட்கப்பட்டது ஸ்காபுறோ நகரவாசிகளிடையே பெரும் அச்சத்தினை உண்டு பண்ணியுள்ளது. " போதும், போதும்." என குமுறத் தொடங்கியுள்ளனர் மோர்நிங்சைட் அவென்யூவில் வசிக்கும் மக்கள்.


மாநகர முதல்வரை முதலில் இதைப் பார்க்கச் சொல்லுங்கள். இது போன்ற வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வர உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். எங்களுக்கு இது பிடிக்கவில்லை எனப் புலம்புகிறார் இப்பகுதியில் வசித்து வரும் குடியிருப்புவாசிகளில் ஒருவரான தஜம்முள் நவாஷ்.

நேற்று அதிகாலை 1 மணியளவில் மோர்நிங்சைட் அவென்யூவிற்கு அருகில் உள்ள Fawcett Trail பகுதியில் 20 வயது மதிக்கத்தக்க ஒருவர் காவல்துறையினால் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். கொலை செய்யப்பட்ட நபர் யார் என்பது தெரியவில்லை என்ற போதிலும் கூட அவர் துப்பாக்கியினால் சுடப்பட்டே கொலை செய்யபபட்டுள்ளார் என்பதை காவல்துறையினர் அறிவித்துள்ளனர். விசாரணை நடைபெற்று வருவதால் இந்த சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்களை வெளியிடவும் காவல்துறை மறுத்து வருகிறது.

இது வரையிலும் காவல்துறைக்கு யார் மீதும் சந்தேகம் எழவில்லை என்பதால் அப்பகுதியில் குடியிருப்போரை விசாரித்து வரும் அதிகாரிகள் துப்புத் துலக்குவதற்காக அண்மையில் குடியிருப்போரை மூளைச் சலவை செய்யவும் தொடங்கியுள்ளனர். இது போன்ற இடர்பாடுகளை சந்திப்பதால் எப்போதும் அச்சத்திலேயே வாழும் நிலை தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கூறி உடனடியாக இதனை முடிவுக்குக் கொண்டு வர மாநகர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் போர்க்கொடி தூக்கத் தொடங்கியுள்ளனர் குடியிருப்புவாசிகள்.

பிரச்சினைகளால் குழம்பிப் போயுள்ளாரா

மாநகர முதல்வர் றொப் போர்ட் - முடிவு யார் கையில்?



கடந்த ஒரு வாரமாகவே கனடிய ஊடகங்கள் மட்டுமன்றி அனைவரும் கிசுகிசுக்கும் செய்தியாக மாறிக் கொண்டிருக்கிறது போர்ட்டின் மீதான வழக்கு விவகாரம். போர்ட் பதவியில் நீடிப்பதை விரும்பாத சில சுயநல அரசியல்வாதிகளின் காழ்ப்புணர்ச்சியாலேயே இந்த வழக்கு தூண்டி விடப்பட்டுள்ளதாக ஒரு சாரார் அடித்துச் சொல்லும் அதேவேளையில் விரைவில் மாநகர முதல்வர் பதவி இழக்க நேரிடும் என்ற செய்திகளும் பரப்பி விடப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்கட்டும். இப்போது பிரச்சினை தான் என்ன?

தன் மீதான வழக்கு பிரச்சினையை இன்னும் றொப் போர்ட் சரிவர விளங்கிக் கொள்ளாமல் இருப்பதே பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாகக் கூறுகின்றனர் சிலர். தன் குழந்தைகளின் பெயரில் சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்ட கால்பந்து அறக்கட்டளைக்கு மக்களின் வரிப்பணத்தை தவறாக செலவழித்தார் என்றும் இதற்காக மாநகர அரசின் பெயர் விவரத்தாள் கற்றையையும் போர்ட் பயன்படுத்தியுள்ளதாகக் கூறி அவர் மீது " conflict of interest" வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இரண்டு முறை நீதிமன்றில் தோன்றி சாட்சியமளித்த பின்னரும் பிரச்சினையை சரியாக புரிந்து கொள்ள முன்வரவில்லை மாநகர முதல்வர் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகிறது. தன்னுடைய சட்டத்தரணி அனைத்தையும் பார்த்துக் கொள்வார். விரைவில் இப்பிரச்சினைகள் தனக்குச் சாதகமாகவே முடிக்கப்படும் என்ற எண்ணமே மாநகர முதல்வரிடம் இது வரையிலும் இருந்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றே.

அனைத்து விதிமுறைகளையும் படித்து, கையொப்பமிட்ட பின்னர் தானே மாநகர முதல்வர் நாற்காலியில் போர்ட் அமர்ந்தார் எனக் கேள்வி எழுப்புகின்றனர் வழக்கைத் தொடர்ந்தவர்கள். இந்த வழக்கினைப் பொருத்த வரையில் அப்பாவி மாணவனாகவே காட்சியளிக்கிறார் றொப் போர்ட்.

நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்பது இன்னமும் தெரியவில்லை. ஆனால் றொப் போர்ட் மாநகர முதல்வராக் தொடர வேண்டுமா என்ற தீர்ப்பு எப்போதும் ரொறொன்ரோ மக்கள் கையில் மட்டுமே உள்ளது

கியூபெக்கில் Legionnaires என்ற நுண்ணுயிரி பரப்பும் நோய் தீவிரம் 11 பேர் பலி 169 பேருக்கு பாதிப்பு

யூலை மாதத்தின் மத்திய பகுதியில் கியூபெக்கில் பரவத் தொடங்கிய Legionnaires நோய்த்தாக்கம் தீவிரமடையத் தொடங்கியுள்ளது. நீரினால் பரவும் இந்நோய்க்கு இது வரையிலும் 11 பேர் பலியாகியுள்ளனர். 169 பேருக்கு பாதிப்பு இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இந்நோய் பாதிப்பு குறித்த உண்மையான தகவல்களை அளிக்க கியூபெக் பொது நல அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். ஆனால் நோய் பரவுவதை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக மட்டும் கூறுகின்றனர்.

இந்த நோயினால் சமீபத்தில் மட்டும் பலர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் , அவர்களை சோதனை செய்து நோயினை உறுதிப்படுத்தவே சில நாட்கள் பிடிக்கும் என்கின்றனர் பொது நல அதிகாரிகள். கியூபெக்கில் உள்ள இரு கட்டிடங்களின் குளிரூட்டும் இயந்திரங்களில் தேக்கி வைக்கப்பட்டுள்ள தண்ணீரிலேயே இந்த கொடிய பாக்டீரியா உருவாகி வளர்ந்துள்ளதை கண்டறிந்த அதிகாரிகள், கியூபெக் நகரில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குளிரூட்டும் இயந்திரங்களை சுத்தப்படுத்தும் பணிகளிலும் இறங்கியுள்ளனர்.

பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொறுப்பு கனடிய தொழிலதிபர்கள் கைகளில் தான் உள்ளது

மார்க் கார்னே, ஜிம் ப்ளஹெர்ட்டி சரமாரி குற்றச்சாட்டு



கனடிய பொருளாதாரத்தை மேம் படுத்த வேண்டிய பொறுப்பு கனடிய கூட்ட மைப்பு நிறுவனங்களைச் சார்ந்த பெரும் தொழிலதிபர்கள் கைகளில் உள்ளதாகவும் ஆனால் இதற்கான பங்களிப்பை வழங்க தொழிலதிபர்கள் தவறி விட்டனர் என கடுமையான குற்றச்சாட்டுக்களை கடந்த சில தினங்களுக்கு முன்னர் பேங்க் ஒப் கனடா ஆளுநர் மார்க் கார்னே கூறியிருந்தார். தற்போது அதே கருத்தையே மீண்டும் உறுதிப்படுத்தும் விதத்தில் பெரும் தொழிலதிபர்களின் திறமையின்மையே கனடிய பொருளாதாரம் நலிவடைந்து வரக் காரணம் என குற்றஞ்சாட்டியுள்ளார் நிதியமைச்சர் ஜிம் ப்ளஹெர்ட்டி.

கனடாவின் பெரும் கூட்டமைப்பு நிறுவனங்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை முதலில் தெரிந்து கொண்டு பெரும் லாபமீட்ட முயல வேண்டும். அப்படி முடியாத நிறுவனங்கள் பங்குதாரர்களின் கைகளில் விட்டு விடுங்கள் அவர்கள் உங்கள் நிறுவனத்தை பார்த்துக் கொள்வார்கள் என தொழிலதிபர்களை மார்க் கார்னே கடுமையாகச் சாடியுள்ளது கனடிய தொழிலதிபர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது.

ஒரு கால கட்டத்திற்கு மேல் கனடிய பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும் பொறுப்பு அரசின் கைகளில் மட்டும் இல்லை என்றும் தனியார் துறை நிறுவனங்கள் ஆர்வத்துடன் முன் வந்தால் மட்டுமே பொருளாதாரம் காப்பாற்றப்படும் என நேற்று அமைச்சர் ஜிம் ப்ளஹெர்ட்டி பேசியுள்ளார். அதிகப்படியான மூலதனம் மிகப் பெரும் தனியார் கூட்டமைப்பு நிறுவங்களின் கைகளில் இருப்பதால் தொழிலதிபர்கள் சோம்பேறிகளாக உட்கார்ந்து கொண்டிருக்காமல் தொழில் மீள் முதலீடு செய்து அவற்றை முன்னேற்ற பாடுபட வேண்டும் என நிதியமைச்சர் ஜிம் ப்ளஹெர்ட்டி பேசியுள்ளது கனடிய பெரும் தொழிலதிபர்களுக்கு கோபத்தை உண்டாக்கியுள்ளது.

முழுமையாக எதனையும் தெரிந்து கொள்ளாமல் அதிகமான மூலதனமும் , சொத்துக்களும் தனியார் நிறுவனங்களிடம் மட்டுமே இருப்பதாகப் பேசுவதும் , பொருளாதாரப் பின்னடைவு நிலை களுக்கு தொழிலதிபர்கள் மீது குற்றம் சுமத்துவதும் அரசின் கையாலாகத் தனத்தையே காட்டுவதாகக் கூறுகின்றனர் தொழிலதிபர்கள். அதே நேரத்தில் தொழில் மந்த நிலைகளுக்கு அனைவரும் பெறுப்பேற்க முன்வர வேண்டும் என்பதையும் ஒட்டவா தொழிலதிபர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.


எது எப்படியோ நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலைக்கு ஒவ்வொருவரும் மற்றவரை குற்றம் கூறி வருவதால் கனடிய பொருளாதாரம் அகல பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது என்பது மட்டும் தெளிவாகப் புரிகிறது. இந்த நிலையை சரிக்கட்ட இனியாவது அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயல்பட முன் வருமா??

வட அமெரிக்காவிலேயே வேகத் தடைகளை அதிகம் கொண்ட மோசமான பகுதி ஒன்ரோறியோ - கருத்துக் கணிப்புத் தகவல்

அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் தேசிய ஊர்திகள் சங்கம் அண்மையில் இணையம் மூலமாக மக்களிடம் கருத்துக்கணிப்பொன்றை நடத்தியுள்ளது. வட அமெரிக்காவில் அதிக வேகத் தடைகளை கொண்ட மாநிலமாக ஒன்ரோறியோ தெரிவாகியுள்ளது. அந்தந்த பகுதிகளின் மக்கள் தொகையையும் கணக்கில் கொண்டே இந்த முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

50,000 க்கும் மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட மிசிசாகா மோசமான வேகத்தடைகளைக் கொண்ட கனடிய நகரங்கள் வரிசையில் ஐந்தாம் இடத்தைப் பிடித்துள்ளது. இந்த வரிசையில் விண்ட்சொர் மூன்றாமிடத்தையும், ஹமில்டன் நான்காம் இடத்தையும் பிடித்துள்ளன. வேகத்தை கட்டுப்படுத்துவதற்காக சாலைகளில் அமைக்கப்படும் வேகத்தடைகள் குறித்த மக்களின் அறிந்து கொள்வதற்காக கடந்த ஐந்து வருடங்களாக தேசிய ஊர்திகள் சங்கம் இந்த கருத்துக் கணிப்பை நடத்தி வந்தது.


பொதுவாக வேகத்தை கட்டுப்படுத்தவே இந்த தடைகள் அமைக்கப்படுகின்றன என்ற போதிலும் கூட பெரும்பானமையான மக்கள் இதனால் வேகம் கட்டுப்படவில்லை. மாறாக குற்றங்களே நடக்கின்றன என வாதிடுகின்றனர். அதே நேரத்தில் ஒன்ரோறியோ சாலைகள் பாதுக்காப்பான சாலைகள் என்ற பெயரைப் பெற்றுள்ளதற்கு முக்கிய காரணமே இது போன்ற வேகத்தடைகள் தான். இதனால் விபத்துக்கள் பெருமளவில் குறைந்து வருகிறதென கூறியுள்ளார் ஒன்ரோறியோ போக்குவரத்து அமைச்சக செய்தி தொடர்பாளர் பாப் நிக்கோலஸ்.



காணொளிகளே செய்தி :
நல்லூர் கந்தனின் தேரில்
இலங்கை அரசு மலர் சொரிந்த காட்சி

தமிழர்களின் தெய்வமாகிய நல்லூர் கந்தன் திருவிழா கடந்த மாதம் கொடியேற்றத்துடன் தொடங்கி 25 நாட்கள் சீரும் சிறப்பமுமாக நடந்து முடிந்தது. விழாவின் முக்கிய நாளான 24 ஆம் நாள் தேர் திருவிழாவின் போது பக்தர்கள் அரோகரா கோஷம் விண்ணைப் பிளக்க நல்லூர்க்கந்தன் தேரில் எழுந்தருளி வலம் வந்தார். இலட்சக்கணக்கான பக்தர்கள் புடை சூழ நல்லூர் கந்தன் தேர் ஏறி வரும் காட்சியினையும், குண்டு மழை பொழிந்த சிங்கள அரசு இப்போது அதே மண்ணில் ஹெலிகொப்டர்கள் மூலமாக பூமழை பொழிவதையும் காணொளியில் காணலாம்.

முதியவரை கடித்துக் குதறிய நாயை சுட்டுக் கொன்ற ரொறொன்ரோ காவல்துறை அதிகாரிகள்



வில்பர் கிருநேக்லீ என்ற 54 வயது ரொறொன்ரோ முதியவர் ஒருவர் நாயினால் கடித்துக் குதறப்பட்ட காயங்களுடன் நேற்று செயிண்ட் மைக்கேல் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட காட்சி அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. கையினில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலைக்கு வில்பரை தள்ளியுள்ளது அந்த நாய். இது குறித்து வழக்குப் பதிவு செய்த ரொறொன்ரோ காவல்துறை அதிகாரிகள் நாயினை கட்டுப்படுத்த முயன்றும் முடியாமல் போகவே, வேறு வழியின்றி நேற்று அதனை சுட்டுக் கொன்றனர்.

வில்பர் கிருநேக்லீயை கடித்துக் குதறிய நாய் அவருடையதல்ல. அவரின் நண்பர் ஒருவர் ஒரிரு நாட்களுக்கு தன்னுடைய நாயை பார்த்துக் கொள்ளுமாறு வில்பரிடம் உதவி கேட்டுள்ளார். ஒரிரு நாட்களில் திரும்புவதாக நண்பர் கூறிச் சென்றதால் தனக்கே உணவில்லாமல் வருந்தும் நிலையிலும் கூட தினமும் அதற்கு உணவளிப்பது, நடைப்பயிற்சிக்கு கூட்டிச் செல்வது உள்ளிட்டவற்றை செய்து வந்துள்ளார் வில்பர் கிருநேக்லீ.

நேற்று திடிரென ஆக்ரோசத்துடன் வில்பரின் அறைக்குள் புகுந்த நாய் அவரை கடித்துக் குதறியுள்ளது. உதவிக்காக விலங்கின சேவை மையங்களை தொடர்பு கொள்ள பல மணி நேரங்கள் முயற்சித்து தோற்றுப் போன வில்பர் அதன் பின்னரே நாயின் வெறிச் செயல் குறித்து காவல் துறையிடம் புகாரளித்துள்ளார்.

பலத்த காற்றினால் தகர்ந்தது சாதனைப் பாட்டியின் கனவு



ஒன்ரோறியோ ஏரியை எப்படியாவது நீந்தி கடந்து விட .வேண்டும் என அறுபது வயதில் உற்சாகத்துடன் முயற்சித்த கனடியப் பெண் மணியின் கனவு பலத்த காற்றடித்ததால் இறுதி நேரத்தில் தகர்ந்தது. புதன்கிழமை அதிகாலை வேளையில் ஒன்ரோறியோ ஏரியில் நீந்தத் தொடங்கினார் ஜார்ஜ்டவுன் பகுதியைச் சேர்ந்த பெண்மணி கோலீன் ஷீல்ட்ஸ்.

50.5 கிலோ மீட்டர்கள் நீச்சல் பயணத்தைத் தொடங்கிய இவர் பலத்த காற்றடித்ததால் இரவு 8 மணிக்கு மீட்பு படையினர் உதவியுடன் ஏரியிலிருந்து மீட்கப்பட்டார். தனது சாதனையை முடிக்க 10 கிலோமீட்டர்களே உள்ள நிலையில் மரிலின் பெல் பார்க் பகுதியில் அவரால் நீந்த முடியாமல் போனது அனைவருக்கும் பெரும் ஏமாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது.

இருப்பினும் அறுபது வயதிலும் அயராத முயற்சியுடன் தொடர்ந்து மூன்றாவது முறையாக சாதனை படைக்க முயற்சித்த பெண்மணியை அங்கு குழுமியிருந்தோர் அனைவரும் மனமாரப் பாராட்டினர். முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதற்கு இலக்கணமாகத் திகழும் கனடிய பெண்மணி கோலீன் ஷீல்ட்சை இகுருவி மனமார வாழ்த்துகிறது

ரொறொன்ரோவில் பெருகி வரும் மக்கள் தொகை புதிய தொகுதிகள் உருவாக்கப்படுமா?



ரொறொன்ரோ மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் சமீப கால மாகவே சனத்தொகை அதிகரித்து வருவதால் புதிய வாக்காளர் தொகுதிகள் உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. அண்ண ளவாக 12 புதிய தொகுதிகள் உருவாக்கப்படலாம் எனத் தெரிகிறது. ஒன்ரோறியோ அரசின் தேர்தல் எல்லை மதிப்பீட்டுக்கழகம் இது தொடர்பான விபரங்களை நில வரைபடத்துடன் இணைய தளத்தில் நேற்று வெளியிட்டுள்ளது.

இதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் களின்படி ரொறொன்ரோ ஊரகப் பகுதிகளில் மேலதிகமாக 15 புதிய தொகுதிகள் உருவாக்கப்படும் என்றும் இந்த தொகுதிகளுக்கு பொதுத்தேர்தல் நடத்தப் பட்டு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதும் உறுதியாகியுள்ளது.

தற்போது 106 ஆக உள்ள ரொறொன்ரோ சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 121 ஆக உயரக்கூடும். பீல் மற்றும் யோர்க் பகுதிகளில் தலா மூன்று புதிய தொகுதிகள் உருவாக்கப்பட உள்ளன. ரொறொன்ரோ மற்றும் துர்ஹம் பகுதிகளில் தலா இரண்டு தொகுதிகளும் , ஹல்ட்டனில் ஒரு புதிய தொகுதியும் உருவாக்கப்பட உள்ளது. கேம்பிரிட்ஜ், ஒட்டவா, சிம்கோ மற்றும் ஹமில்டனும் புதிய தொகுதி உருவாக்கத்தால் பயனடையும் பிற பகுதிகளாகும்.

Business Connections

காணொளிகளுக்கு சர்வதேச அங்கீகாரம்

Discovery CHANNEL

இகுருவி தொடங்கப்பட்ட சில மாதங்களிலேயே எமது தொழில் ஆலோசனை முதன்மை நிறுவனமான Tamils Business Connections காணொளிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கத் தொடங்கியுள்ளது. Tamils Business Connections ஒரு சில வருடங்களுக்கு முன்னரே கனடிய தொழில் துறையால் நன்கு அறியப்பட்ட ஒரு நிறுவனமாக இருந்த போதிலும் கூட சர்வதேச அளவிலான அங்கீகாரம் கிடைப்பதில் சில இடர்ப்பாடுகள் இருந்து வந்தன. ஆனால் கடந்த சில மாதங்களாக கனடிய செய்திகளை நம் மக்களுக்கு உடனுக்குடனே தெரியப் படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இகுருவி என்ற செய்திதளத்தை யாம் தொடங்கினோம். இரவு , பகல் பாராது Business Connection நிறுவனத்துடன் இணைந்து எமது இகுருவி ஆசிரியர் குழு பணியாற்றியதால் இந்த வெற்றியினைப் பெற முடிந்ததை எண்ணி பெருமைப்படுகிறோம்.

கடந்த வருடம் cityTvயும், கடந்த புதன்கிழமை டிஸ்கவரி சேனல் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களும், கனடிய செய்தி ஊடகங்கள் சிலவும் எமது சில குறிப்பிட்ட காணொளிகளை பயன்படுத்த அனுமதி கேட்டுள்ளதால் அவர்கள் சில குறிப்பிட்ட காணொளிகளை மட்டும் பயன்படுத்திக் கொள்ள அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக Biztha.com, இகுருவிக்கு ஆதரவளித்து வரும் கனடியத் தமிழ் மக்கள் மற்றும் எம் மக்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியினை காணிக்கையாக்குகிறோம்.

ஐ-போட் பயன்படுத்த துவங்கியுள்ளன

ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலை மனிதக் குரங்குகள்



ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலையில் உள்ள ஒரங்குட்டான்களை நவீன யுகத்துடன் இணைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஒரங்குட்டான்களுக்கு ஐ-போட் பயன்படுத்தும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவை தற்போது ஐ-போட் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. ரொறொன்ரோ வனவிலங்கு சாலையில் உள்ள ஆறு மனிதக் குரங்குகளுக்கு ஐ-போட்கள் கொடுக்கப்பட்டு சோதித்துப் பார்க்கப்பட்டதில் மிக விரிவாக் இல்லாவிடினும் கூட மெதுவாக ஐ-போட்களை பயன்படுத்த அவை கற்றுக் கொண்டு வருகின்றன என இவற்றை பராமரித்து வரும் பெரிட்ஜ் கூறியுள்ளார்.

மனிதக்குரங்குகள் இயற்கையாகவே அறிவான விலங்கு என்றும் அவற்றை ஊக்குவிக்கவே ஐ-போட்களை பயன்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். புப்பே எனப்படும் 45 வயது ஒரங்குட்டான் பிற இளைய ஒரங்குட்டான்களை தள்ளி விட்டு விட்டு ஐ-போட்களை இயக்க வேகமாக முந்திக் கொண்டு வருகிறதென்பதும் தெரிய வந்துள்ளது.

பொருத்துதல் மற்றும் வண்ணம் தீட்டும் விளையாட்டுக்களை விளையாடுவதில் பெரும்பான்மையான மனிதக் குரங்குகள் ஆர்வம் காட்டுகின்றன. பிற மனிதக் குரங்குகளின் ஒளிப்படங்களை பார்ப்பதிலும் , காணொளிகளை ரசித்துப் பார்ப்பதிலும் ஒரங்குட்டான்களுக்கு அலாதி பிரியம் உள்ளது. காணொளிகளை ஐ-போட்டில் காண்பித்து விட்டால் போதும் குழந்தைகள் கார்ட்டூன் பார்ப்பதைப் போன்று வைத்த கண் வாங்காமல் பார்த்து ரசிக்கின்றன ரொறொன்ரோ மிருகக்காட்சிசாலை மனிதக் குரங்குகள்.

றொறொன்ரோ சாலையோர உணவகங்களின் உணவுப் பட்டியலை அங்கீகரிப்பதில் நீடிக்கும் சிக்கல் - விழவு காலம் எப்போது?



றொறொன்ரோவில் இயங்கி வரும் சாலையோர உணவகங்கள் தாங்கள் விரும்பிய இறைச்சி உணவுகளை பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என மாநகர சபை கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே அறிவித்த போதும் இன்று வரையிலும் ஹொட் டாக் மற்றும் சாஸ் ஆகியவையே சாலையோர உணவகங்களில் விற்கப்பட்டு வருகிறது. இது பெரும் பான்மையான மக்களிடையே விரக்தியை உண்டாக்கியுள்ளது.

புதிய உணவுப் பட்டியல் இது வரையிலும் ஏன் வெளியிடப்படவில்லை என சாலையோர உணவகங்களின் உரிமையார்கள் சிலரிடம் இகுருவி செய்திகளுக்காக கேட்ட போது,

மாநகர சபை பல உணவு வகைகளை சாலையோரங்களில் விற்பதற்கு பச்சைக் கொடி காட்டிய போதிலும் கூட றொறொன்ரோ பொது நல அமைப்பு இதற்கான அங்கீகாரத்தை இன்னமும் வழங்கவில்லை என்பதால் தங்களால் அதிகப்படியான புதிய உணவுகளைத் தயாரிக்க முடியவில்லை எனக் கூறுகின்றனர் சாலையோரக் கடை உரிமையாளர்கள்.

ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட உணவுகளைத் தவிர பிற புதிய உணவு குறித்த முழுமையான விளக்கங்களுடன் கடை உரிமையாளர்கள் அங்கீகாரத்திற்கு விண்ணப்பித்த பின்பே இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்கிறார் றொறொன்ரோ பொது நல அமைப்பின் தர உறுதி மேலாளர் சில்வனுஸ் தோம்ப்சன். இது வரையிலும் கடைக்காரர்கள் யாரும் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கத நிலையில் மாநகராட்சியின் அனுமதியை மட்டுமே வைத்துக் கொண்டு தங்களால் ஒன்றும் செய்ய முடியாது எனவும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

போலியான திருமணங்கள் மூலம் நூற்றுக்கணக்கானோர் கனடாவில் குடியேறியுள்ளது அம்பலம்

கனடிய குடிவரவு சட்டங்களின் படி வேறொரு நாட்டைச் சேர்ந்தவர் கனடியர் ஒருவரை திருமணம் செய்வதன் மூலம் ஆறு மாதத்திற்குள்ளாக கனடாவிற்குள் நுழைய முடியும். இல்லையெனில் கனடாவுக்குள் நுழைய 6 வருடங்களுக்கும் மேலாக காத்திருக்க வேண்டியதிருக்கும் என்பதை காரணமாக வைத்துக் கொண்டு நூற்றுக்கணக்கான போலித் திருமணங்கள் மூலம் பலர் கனடாவில் குடியேறியுள்ளனர் என கனடிய காவல்துறை கண்டறிந்துள்ளது.

இது குறித்து முதற்கட்டமாக நடத்தப்பட்ட விசாரணையில் 2007 முதல் 2009 வரையிலான இரு ஆண்டுகளில் மட்டும் சந்தேகத்திற்கிடமான வகையில் 315 திருமணங்கள் நடந்துள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கனடிய பெண்மணிகள் பலர் பணத்தினை பெற்றுக் கொண்டு வட ஆப்பிரிக்காவை சார்ந்தவர்களை தங்கள் கணவர்கள் போன்று காட்டியதுடன் அவர்கள் கனடாவில் குடியேற காரணமாக இருந்திருக்கின்றனர் என்ற விடயமும் அம்பலமாகியுள்ளது.

குற்றம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மீது 78 பிரிவுகளின் கீழ் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக குற்றவாளிகளென உறுதிப்படுத்தப்பட்டவர்களின் கடவுச் சீட்டு தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளதுடன் மேற்கொண்டும் இவர்களிடம் விசாரித்து விட்டு எதிர்வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதியன்று நீதிமன்றில் நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது குற்றவாளிகளென உறுதிப்படுத்தப்பட்டவர்களிடம் நடத்தப்படும் விசாரணைகளில் மேலும் பலர் சிக்கக்கூடும் எனவும் காவல்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.


Publisher : Tamils Business Connection
Tel : 416-272-8543
Web : ekuruvi.com
Email : info@ekuruvi.com

கனடாவில் அதிகம் களவு போகும் கார் எது தெரியுமா??

கனடாவிலும், அமெரிக்காவிலும் அதிகம் திருடப்படும் கார் ரகங்கள் குறித்த விபரங்களை தேசிய காப்பீட்டு முகமை வெளியிட்டுள்ளது. புதிய கார்களை விட பழைய கார்களே இரு நாடுகளிலும் அதிகமாக களவு போகின்றன என்பது தெரிய வந்துள்ளது. கனடாவில் Toyota Venza காரும் அமெரிக்காவில் Honda Accord காரும் அதிகம் திருடப்பட்டு வருகின்றன. டொயோட்டா வென்ஜாவிற்கு அடுத்தபடியாக ஹோண்டா சிவிக் ரக கார்களும் கனடாவில் திருடர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.

2009 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு வெளியான ஐந்து கதவுகளைக் கொண்ட Toyota Venza களவு போகும் கார்கள் வரிசையில் முதலிடத்தையும், 1999 மற்றும் 2000 ஆம் வருட Honda Civic கார்கள் இரண்டாம், மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளன. டொயோட்டா வென்சா ரக கார்களில் திருட்டுக்கெதிரான சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் கூட இந்த கார்களின் மிடுக்கான தோற்றமும், காரினுள் இருக்கும் தாராளமான இட வசதியுமே திருடர்களின் கவனத்தை ஈர்க்க காரணமாய் உள்ளன என்பதையும் தேசிய காப்பீட்டு முகமை சுட்டிக்காட்டியுள்ளது.

2011 இல் கனடாவில் அதிகம் களவு போன முதல் 10 வாகனங்களின் தர வரிசைப் பட்டியல்
2009 Toyota Venza 5-door
1999 Honda Civic SiR 2-door
2000 Honda Civic SiR 2-door
2006 Ford F350 Pickup Truck 4WD
2002 Cadillac Escalade EXT 4-door AWD
2006 Chevrolet TrailBlazer SS 4-door 4WD
2007 Ford F350 Pickup Truck 4WD
2001 Pontiac Aztek 4-door AWD
1998 Acura Integra 2-door
1999 Acura Integra 2-door



2011 ல் அமெரிக்காவில் அதிகம் திருடப்பட்ட முதல் 10 வாகனங்களின் தர வரிசைப் பட்டியல்
1994 Honda Accord
1998 Honda Civic
2006 Ford F-Series Pickup
1991 Toyota Camry
2000 Dodge Caravan
1994 Acura Integra
1999 Chevrolet Silverado Pickup
2004 Dodge Ram Pickup
2002 Ford Explorer
1994 Nissan Sentra



றொறொன்ரோ பெருநகரப் பகுதிகளில் புலனுக்கெட்டாத சக்தி உலவுவதாக ஆராய்ச்சியாளர்கள் தகவல்

- பேய் விரட்ட ஆள் தேவை என்றும் அறிவிப்பு -



பேய் மற்றும் ஆவிகளை விரட்டத் தெரிந்த ஒருவரை தங்கள் ஆராய்ச்சிப் பணிகளுக்காக தேடி வருகின்றனர் றொறொன்ரோ பெரு நகரப் பகுதியில் ஆராயச்சியினை மேற்கொண்டுள்ள ஹால்டன் புலனுக்கெட்டாத ஆராய்ச்சிக் குழு. மில்டனைச் சேர்ந்த இக்குழு றொறொன்ரோ நகரப் பகுதி முழுவதிலும் ஆவி நடமாட்டம் குறித்து ஆராய்ந்து வருகிறது. தங்கள் ஆராய்ச்சியில் பணி புரிய முன் வரும் பேய் விரட்டும் நபருக்கு மணிக்கு கூ12 மட்டுமே ஊதியமாகத் தர இயலும் எனவும் இக்குழு பகிரங்கமாக அறிவித்துள்ளது.

தற்போது இந்தக் குழுவின் நடவடிக்கைகளை ஆவணப்படமாகவும் எடுக்க திரைப்படத் துறையைச் சேர்ந்த சிலர் முடிவு செய்துள்ளனர். ஆவணப்படமெடுக்கும் நிறுவனம் சார்பில் நியமிக்கப்படவுள்ள நபருக்கு அதிகப்படியான ஊதியமும் வழங்கப்படலாம் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

இணையத்தில் இது குறித்த அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டுளள்தால் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே நூற்றுக்கணக்கானோர் இப்பணிக்காக விண்ணப்பித்துள்ளதாகக் கூறுகிறார் ஹால்டன் புலனுக்கெட்டாத ஆராய்ச்சிக் குழும நிறுவனர் வல்ஸ்டர். றொறொன்ரோ பெரு நகரப் பகுதிகளில் புலனுக்கெட்டாத சக்திகள் இருப்பதினால் கைவிடப்பட்ட வீடுகள் சிலவற்றிற்குச் சென்று வாரத்தில் இரு நாட்கள் , அங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளவிருப்பதாகக் கூறுகிறார் வல்ஸ்டர்.

செவ்வாய்கிழமையன்று இரவு ஆக்டன் டவுன் ஹால் மையத்திற்குச் சென்ற இக்குழுவினர் அங்கு ஜிம்மி என்ற பெயரில் ஆவி உலவுவதையும் அதன் உருவத்தினையும் படம் பிடித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)



Certificate Courses

Food Services Worker
Food Handler Course
Bank Teller Course
Canadian Securities Course
Software Testing
Web Development
MS Office
Quickbooks, AccPac, Simply Acctg

The Private Career College Act, 2005 does not apply to these certificate courses

Graduates of the following programs may find jobs as :

Community Services Worker (47 wks)
- Community Support Worker
- Community outreach Worker
- Resource Counselor
- Intake Counselor

Accounting & Payroll Admin (44 wks)
- Pay & Benefits Clerk
- Payroll Clerk
- Pay Advisor
- Acctg & Payroll Clerk

Ent. Network Engineering (50 wks)
- Network Specialists
- Network Designers
- Network Supervisor
- Network Analyst

Int. Application Development (40 wks)
- Application Developer
- Web Designer
- Analyst/Programmer
- Web Master

Early Childcare Assistant (32 wks)
- Childcare Assistant
- Daycare Worker
- Infant Daycare Worker
- Preschool Worker

Medical Office Administation (28 wks)
- Medical Office Assistant
- Medical Secretary
- Hospital Ward/Unit clerk
- Medical Records Clerk

Personal Support Worker (24 wks)
- Personal Support Worker
- Home Support Worker
- Personal Care Attendant
- Residence Care Aid

Network Engineering (28 wks)
- LAN Manager
- Network Administrator
- System Administrator
- Network Support Analyst

Computerized Accounting (26wks)
- Accounting Assistant
- Accounts Administrator
- Accounts Payable Clerk
- Accounts Receivable clerk

Business Administration (26 wks)
- Administrative Assistant
- Office Assistant
- Office Administrator
- Executive Assistant

SECOND CAREER

EI, ONTARIO WORKS WELFARE, ODSB, WSIB RECIPIENTS & NEW IMMIGRANTS WELCOME

www.computek.edu

Financial assistance may be available to those who qualify

Not all the courses are available at all the campuses

* Exact length of the courses are specified

Markham
Markham / Steeles
905.471.3344

Scarborough
Kennedy / Sheppard
416.321.9911

Toronto
Kennedy / Eglinton
416.285.9941

www.ekuruvi.com
ஈ குருவி

சிறகு - 01 | 12.09.2012 | பறப்பு -04

